# வரம் தரும் வசந்தமே!

## உமா பாலகுமார்



18

## 1

அன்று, ஆசிரமம் முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது.

வரவேற்புத் தோரணங்கள், வண்ணங்களின் கலவையாய்க் காற்றில் படபடத்து வாசலில் சப்தமாய் வரவேற்புரை வாசித்தன.

ரங்கோலி முறையில், ஆசிரம வாசலில் வண்ணக்கோலமொன்றைப் போட்டுக் கொண்டிருந்தாள், சங்கமித்ரா.

அவள் மனம் முழுவதும், உற்சாகத்தில் மலர்ந்து விகசித்துக் கொண்டிருந்தது.

கோலத்தை முடித்து விட்டு, எழுந்து நின்று பார்த்த போது, அந்த வாசலே மிகவும் அழகாகி விட்ட உணர்வு வந்தது, அவளுக்குள்!

மனதில் லயிப்புடனும், ஈடுபாட்டுடனும் செய்யும் எந்தக் காரியமும் அழகுற அமையுமென்று ஆசிரமத் தலைவி கூறுவது எவ்வளவு உண்மையென்று இன்று தெரிகிறது.

இன்று ஆசிரமத்தின் இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழா என்பதால், அனைவருமே ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் அது சம்பந்தமான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்.

விடிந்து சிறிது நேரமே ஆகியிருந்ததால், காற்றில் குளிர் மிகுந்து தெரிந்தது. தோட்டத்தில் ஒற்றைக்காலில் தவமிருந்த மலர்கள், தென்றல் காதலன் சரசமாய் மேனி தீண்டியதும் மெய் சிலிர்த்துத் தலையாட்டின!

பலவித மலர்களின் நறுமணமும் காற்றில் கலந்து, இதமாய்ச் சங்கமித்ராவின் முகத்தில் மோதின.

இறை வணக்கத்துக்குத் தயாராகி வந்த சில சிறுவர்கள், அவள் போட்டிருந்த கோலத்தைப் பார்த்து விட்டு ரசித்துப் பாராட்டினர்.

அவர்களுக்கு நன்றி கூறிவிட்டு அன்புடன் அணைத்துக் கொண்டாள் அவள்.

இந்தச் சிறுமலர்களை விட்டுட்டு இன்னும் பதினைந்து நாட்களில் தான், பிரிந்து செல்ல வேண்டுமே என்ற கவலை, நீண்ட பெருமூச்சாய் வெளிப்பட்டது.

ஆனால், தனக்கென ஒரு பாதையை வகுத்துக் கொள்ள வேண்டும் என்பதில், அவள் உறுதியாக இருந்தாள்.

ஒரு கூட்டுப் பறவைகளாக அனைவரும் ஒன்றாய் இணைந்திருந்த இந்த ஆசிரமத்திலிருந்து, அவள் மட்டும் பிரியப் போகிறாள்.

இங்குள்ள பிள்ளைகளைப் பார்க்கும் போதெல்லாம், தாங்கள் அனைவரும் தாய் தந்தை இல்லாத அநாதைகள் என்பதே அவளுக்கு மறந்துபோகும். எல்லோருமே தன் உறவு என்பதுபோல் மனம் நிறைந்து போகும்.

உசிலம்பட்டியில், இன்றும் பலியாகும் பல பெண் சிசுக்களுக்கிடையில், தெய்வாதீனமாக உயிர் பிழைத்து, மதுரையிலுள்ள அந்த ஆசிரமத்திற்கு அழைத்து வரப் பட்டவள் சங்கமித்ரா!

"இறைவன் அளித்த ஒப்பிலாத உயிரைப் பறிக்கும் உரிமையை, இந்த ஊரப்

பெண்களுக்கு மட்டும் யார் பட்டயம் போட்டுத் தந்தது''? என்ற கேள்வி அவள் மனதில் சீற்றமாய் எழுந்தது.

தன்னுடைய ரிஷிமூலம் தெரிந்திருந்ததால், தன் தாயைப் பற்றி பரிதாபப் பட மட்டுமே அவளால் முடிந்தது.

இருபது வருடங்களுக்கு முன்பு, தன்னை ஒரு பெரியவர் உசிலம்பட்டியிலிருந்து கண்டெடுத்து வந்து இங்கு சேர்த்ததாகவும், இன்னும் அவளுக்கென்று பணம் அனுப்புவதாகவும், தன்னைப் பற்றி அவளுக்குத் தெரிய வேண்டாமென்று கூறி இருப்பதாகவும் இந்தப் பிறந்த நாளன்று அன்னை கூறியபோது, மனம் நெகிழ்ந்து போனது.

ஆனால், கள்ளிப்பாலுக்குத் தன்னைப் பலியாக்காமல், பேருந்து நிலையத்தில் போட்டு விட்டுப் போன அந்த உன்னத உள்ளம் கொண்ட தன் தாய்க்கு அவள் மனம் நன்றி கூறியது.

தன்னைக் காப்பாற்றிய அந்தப் பெரியவர் மட்டும் இல்லையென்றால், தன் வாழ்க்கையின் போக்கே திசை மாறி இருக்குமே என்ற நினைவு மனதில் பெரும் விதிர்ப்பை ஏற்படுத்தியது.

இங்கு வளரும் பிள்ளைகளுக்குப் பட்டப்படிப்பு முடிந்து இருபத்தோரு வயதிற்கு மேல், அவர்களுக்கென்று ஒரு எதிர்காலத்தை அமைத்துத் தரும் பொறுப்பை அன்னை ஏற்றிருந்தார்.

ஆசிரமத்திற்கு தொடர்ந்து உதவி வரும் ஒரு பெண்மணிக்கு, அவரை கவனித்துக் கொண்டு துணையாக இருக்க, 'கம்பேனியன்' போல் ஒரு பெண் தேவைப்பட்டாள்.

அந்த வேலைக்கு, அன்னை அவளைத் தேர்வு செய்திருந்தார்.

மித்ரா இனிமையான சுபாவமும், அமைதியும், அழகும், தெய்வபக்தியும் நிறைந்தவள்.

எப்போதுமே அவளிடம் ஒரு இனம் புரியாத பரிவு அன்னைக்கு உண்டு.

அருவிகள் சிதறலாய் வழிந்து மகிழ்விக்கும் குற்றாலத்தில இருக்கிறது - மித்ரா வேலைக்கு செல்லப் போகின்ற அபிராமி அம்மாளின் வீடு!

அவர் வருடம் ஒரு முறையாவது இங்கு வரும் போது, மித்ரா அவரைப் பார்த்திருக்கிறாள்.

அவருக்கும் மித்ராவை மிகவும் பிடித்திருந்ததால், அடுத்த மாதம் முதல் வாரத்தில் வந்து அவளை அழைத்துப் போவதாகவும் எழுதியிருந்தார் அபிராமி.

ஆசிரமத்தை விட்டுச் செல்வதற்கு அவள் மனம் வருந்தினாலும், தனக்கென ஒரு வேலையை அமைத்துக் கொடுத்த அன்னையின் மேல் மதிப்பும், மரியாதையும் நிறைந்தன.

நினைவுகளிலிருந்து கலைந்த மனம், தனக்கு மிகவும் பிடித்த பாடலொன்றை மகிழ்ச்சியுடன் முணுமுணுத்தது.

''மார்கழிப் பூவே... மார்கழிப் பூவே!'' இதழ்கள் மென்மையாகப் பாடிசைக்க, ''என்ன மித்ரா? ரொம்ப சந்தோஷமா இருக்கே போலிருக்கே? குற்றாலத்துக்குப் போகப் போற சந்தோஷமா?'' என்றாள் - அவளையே கவனித்தபடி வந்த திலகா.

''ம்... ஆனா, இன்னிக்கு நடக்கப் போற விழாவும், 'அன்னை'க்கு கிடைக்கப் போற விருதும்தான் முக்கியக் காரணம்!'' என்றாள் முறுவலித்தபடி!

எல்லோராலும் அன்புடன் 'அன்னை' என்று அழைக்கப்படும் ஆசிரமத் தலைவிக்கு, இருபத்தி ஐந்து வருடங்களாக இந்த ஆசிரமத்தை வெற்றிகரமாக நடத்தி வருவதைப் பாராட்டும் விதமாக இன்று விருது வழங்கப் போகிறார்கள்.

அன்று செய்ய வேண்டியிருந்த வேலைகள் அழைக்க, இருவருமே பேசியபடி மெதுவாக உள்ளே சென்றனர்.

அன்று, விழா இனிது நடந்து முடிந்தது! 'அன்னை'க்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட... அனைவரின் மனமும் நிறைந்திருந்தது.

மறுநாள் அனைவருமே ஒருவிதமான சோம்பலுடன் இருந்தபோது, அன்னையிடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

அலுவலக அறையில் யாரோ ஒரு புதியவனிடம் பேசிக் கொண்டிருந்தவர், அவளைக் கண்டதும், ''சங்கமித்ரா! இவர் சுரேந்திரன்... அபிராமி அம்மாவோட மகன்! இன்னிக்கே உன்னை ஊருக்கு அழைச்சிட்டுப் போறதுக்காக வந்திருக்கார்...'' என்றார்.

மித்ரா அவனிடம் திரும்பி ''வணக்கம் சார்..!'' என்ற போது அவன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

தலையை மட்டும் மெதுவாக அசைத்துவிட்டு அமர்ந்திருந்த அவன் தோரணையில், கர்வமும் அலட்சியமும் மிகுந்து தெரிந்தன.

மித்ரா தயக்கத்துடன், ''இன்னும் பதினைந்து நாள் கழிச்சித்தானேம்மா போகணும்னு சொல்லியிருந்தீங்க...?'' கேள்வியாக நோக்கினாள்.

உடனே, பொறுமை இழந்த பாவனையுடன் அவன் எழுந்தபோதுதான், அவன் உயரம் நிச்சயமாக ஆறடிக்கும் மேல இருக்குமென்று கணித்தாள் அவள்.

''அம்மாவுக்கு வைரல் ஃபீவர்... அதான் வந்தேன் மேடம்! வர இஷ்டமில்லைன்னா நான் வேணா வேற ஆள் பாத்துக்கறேன்... பேப்பர்ல போட்டா நாளைக்கே கூட ஆள் கிடைப்பாங்க...'' சிறு கோபத்துடன் அன்னையிடம் கூறினான்.

அன்னை, அவளை ஒரு பார்வை பார்த்து விட்டுத் திரும்பி அவனிடம், ''நீங்க போய் உங்க வேலைகளை முடிச்சிட்டு வந்து சாயந்திரம் மித்ராவை அழைச்சிட்டுப் போங்க தம்பி... அவ தயாரா இருப்பா! நான் அம்மாக்கிட்ட ஃபோன்ல பேசிடறேன்'' என்று கூறிவிட்டு எழுந்தார்.

ஏதோ யோசனையுடன் ''சரி... நான் ஈவினிங் ஆறு மணிக்கு வரேன்'' என்று கூறிவிட்டு வெளியேறினான் அந்த சுரேந்திரன்.

என்ன செய்வதென்று புரியாமல் அன்னையையே பார்த்துக் கொண்டிருந்தவளிடம், ''மித்ரா! அபிராமி அம்மாவுக்கு உடம்பு சரியில்லைன்ற டென்ஷன் அந்தத் தம்பிக்கு... அதான், எப்படி இருந்தாலும் நீ கிளம்பித் தானே ஆகணும்! இதை விட ஒரு நல்ல பாதுகாப்பான வேலை கிடைக்காது மித்ரா! உனக்கும் அபிராமி அம்மாவைப் பத்தி நல்லாத் தெரியும்... வேற என்ன வேணும்?'' என்றார் கனிவுடன்.

அவளால் மறுக்க முடியவில்லை. தங்கள் நலத்தையே பெரிதாக எண்ணும்

அவரின் மனதை நோகடிக்கவும் மனமின்றி "சரிம்மா... கிளம்பறேன்." என்றாள்.

ஆனால், ஆசிரமத்திலிருந்து கிளம்பிச் செல்லும் நாளை இன்று எதிர்பாராக்காததால் நெஞ்சம் குழம்பித் தவித்தது.

மனதோரம் வேதனை மேகம் மையம் கொள்ள, விழியோரம் மெல்லிய மழைச்சாரல்!

## 2

அன்று மாலை, அனைவரிடமும் பிரியாவிடை பெற்று, அன்னையிடம் ஆசீர்வாதம் வாங்கிக்கொண்டு, வாரா வாரம் கடிதம் போடுவதாக தோழி திலகாவிடம் உறுதியளித்து விட்டுக் கிளம்பும் போது மணி ஆறரை என்றது சுவர்க் கடிகாரம்!

மனமும், கண்களும் பிரிவின் காரணமாகக் கலங்கி விட, தாயைப் பிரிந்து முதல் நாள் பள்ளிக்குச் செல்லும் சிறு குழந்தை போல, மருண்டு விழித்தபடி காரில் ஏறினாள் மித்ரா.

சுரேந்திரன், முன்புறம் டிரைவருடன் அமர்ந்து கொள்ள, அவள் பின்னால் ஏறி அமர்ந்தவுடன் கார் வேகமாகப் புறப்பட்டது.

ஆசிரமக் குழந்தைகளுக்கு கையசைத்துக் கொண்டே சென்றபோது, ஏனோ மனம் இரண்டாகி விடும் போல் வலித்தது.

தூரத்தில் கார் புள்ளியாகி மறையும் வரை பார்த்திருந்த அன்னையும், பிள்ளைகளும், அந்தப் பாசக் கூட்டிலிருந்து ஒரு பறவையைப் பிரிந்த கனத்த மனதுடன் உள்ளே சென்றனர்.

மித்ராவின் விழிகளோ, குற்றால அருவியாய்! இந்த வேலையே வேண்டாமென்று காரை விட்டிறங்கி ஓடி விடலாமா என்று படபடப்பாகவே இருந்தது மித்ராவிற்கு!

ஆனால் இயலாமையின் காரணமாக, தன் மீதே கோபம் வர, மெதுவாகப் பின்புறம் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள்.

மூடிய விழிகளுக்குள், கடந்துபோன ஆசிரம வாழ்க்கை இனிதாக நிழலாடியது.

பள்ளிப் பருவமும் கல்லூரி நாட்களும், சிறகடித்து உடன் விளையாடிய ஆசிரமத்துப் பிள்ளைகளின் நினைவும் மறக்க முடியாமல் கண்முன் வலம் வந்தன.

இனி, தான் இருக்கப் போகின்ற சூழலே வேறு மாதிரி இருக்கும் என்ற எண்ணம் விரவிப் பரவ, மனதினுள் ஒருவித பக்குவத்தைத் தத்தெடுத்துக் கொண்டாள் மித்ரா.

அபிராமி அம்மாவை வருடா வருடம் அவள் சந்தித்திருந்தாலும், மனதில் ஏதோ ஒருவித பயம் படர, அன்பைக் கொடுத்தால், பதிலுக்கு அன்பு மட்டும் கிடைக்கும் என்ற அன்னையின் அறிவுரை, நெஞ்சுக்குள் ஆழமாகத் தன் சுவட்டைப் பதித்தது.

அவர்கள் குற்றாலத்திற்குச் செல்லும்போது இரவாகி விட்டிருந்தது.



சுற்றிலும் மரங்கள் சூழ இருந்த ஒரு பெரிய வீட்டின் முன் கார் நின்றபோது அவளுக்கு மலைப்பாக இருந்தது. அபிராமி அம்மா இவ்வளவு பண வசதி படைத்தவரா என்ற பிரமிப்பு வந்தது.

ஆனாலும் அவரின் எளிமையான தோற்றமும், இலகுவாகப் பழகும் தன்மையும், அவர் மீது தனி மரியாதையை வரவழைப்பதாய்!

காரிலிருந்து இறங்கி விரிந்த விழிகளுடன், வீட்டைப் பார்த்தபடி நின்றிருந்த மித்ராவை ஒரு புருவச் சுளிப்புடன் ஏறிட்ட சுரேந்திரன், தன் பின்னால் வரும்படி அவளை ஒரு கையசைவில் ஏவிவிட்டு அலட்சியமாக முன்னே சென்றான்.

'இவன் கை சொடுக்கினால், பின்னே வாலைச் சுருட்டிக் கொண்டு செல்ல, நான் என்ன இவன் வீட்டு நாய்க்குட்டியா?' என்று மனம் புகைந்த போதும், அவன் பின்னே மெதுவாகத் தொடர்ந்தாள் மித்ரா.

வாசலிலேயே, அபிராமி அம்மா கருணை ததும்பும் முகத்துடன் நிற்கக் கண்டதும், மகிழ்ச்சியுடன் வேகமாக அவரிடம் சென்றாள்.

"எப்படிம்மா இருக்கீங்க...? உங்களுக்கு உடம்பு சரியில்லைன்னு சொன்னாங்களே.. இப்பப் பரவாயில்லையா?" அக்கறையுடன் வினவினாள்.

"எனக்கு ஒன்னுமில்லைம்மா.. சாதாரண ஜுரம்தான்! அதுக்குப் போய் ஆர்ப்பாட்டம் செஞ்சி உடனே உன்னை அழைச்சிட்டு வந்துட்டான் சுரேன். இன்னிக்கு நான் நல்லாவே இருக்கேன்" என்றபடி அவளை ஒரு அறைக்கு அழைத்துச் சென்றார்.

"இதுதான்மா உன்னோட ரூம்! நீ வந்தவுடனே எனக்கு ரொம்பத் தெம்பா இருக்கு... தனிமைதான் வயசான காலத்துல கொடுமையான வியாதி... தெரியுமா? சுரேன் காலையில கிளம்பி பேக்டரிக்கு போயிட்டான்னா, நைட்தான் வருவான்...." ஒரு பெருமூச்சுடன் கூறினார்.

"இனிமே நான் இருக்கேம்மா - உங்களுக்குத் துணையா...! நீங்க கவலைப்படாதீங்க! இங்கே எனக்கு என்னென்ன வேலைன்னு சொல்லிட்டீங்கன்னா, செய்ய வசதியா இருக்கும்." என்றாள் ஆதரவாக.

"என்னைப் பாத்துக்கறதுதான் முக்கியமான வேலை! மத்த வேலைக்கெல்லாம் இங்கே ஆளுங்க இருக்காங்க... என் கூடப் பேச, பொழுது போகத்தான் ஆள் இல்லை. நீ எனக்குப் புத்தகம் படிச்சிக் காமிக்கலாம்... எனக்கு கண் பார்வைப் பிரச்சனை இருக்கு. என் கூடக் கோவிலுக்கு வரலாம்... சின்னச் சின்ன உதவிகள் செய்யலாம்... வீட்டை அலங்கரிக்கறதில் உதவலாம்... வாக்கிங் வரலாம்... இப்படி நிறைய வேலை இருக்கு." என்றார் சிரித்துக் கொண்டே!

ஒரு வேலையுமின்றி இங்கிருந்தால் உடல் உழைப்பின்றி தாம் துருப்பிடித்துப் போய் விடுவோமோ என்ற எண்ணம் மனதில் ஊடுருவ, இங்கிருக்கும் நாட்களைப் பயனுள்ளதாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற உறுதி வந்தது.

"அன்னை எப்படி இருக்காங்க...? நானே வந்து உன்னை அழைச்சிட்டு வரலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே இப்படி ஆயிடுச்சு! நீ முகம் கழுவிட்டு வா... நாம ஆசிரமத்துக்கு ஃபோன் போட்டு விபரம் சொல்லிட்டு, அப்புறமா சாப்பிடலாம்..."

''சரிம்மா.. அன்னை நல்லாருக்காங்க... உங்களை ரொம்ப விசாரிச்சதா சொல்லச் சொன்னாங்க'' என்றாள்.

பிறகு ஆசிரமத்திற்குப் பேசிவிட்டு, சாப்பிட்ட பின் அபிராமி அம்மாவிற்கு மாத்திரைகளைக் கொடுத்துவிட்டு வந்து படுத்தவளுக்கு இமைச் சிப்பிக்குள் உறக்க முத்துக்களை அறிமுகப்படுத்த மனம் மறுத்தது.

## 3

அபிராமி அம்மாவிடம் இயல்பாகப் பழகும் மனதில், சுரேனைக் கண்டதும் ஏதோ ஒரு ஒதுக்கம் வருவதைப் புரிந்து கொள்ள முடிந்தது.

அவனுடைய அலட்சியமா... அல்லது அதிகாரத் தோரணையுடன் கூடிய ஒரு பணக்காரத் தனமா... என்னவென்றுதான் அவளால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

மறுநாள், நன்றாக விடிந்த பிறகுதான் விழிப்பு வந்தது, மித்ராவிற்கு!

எழுந்து ஜன்னல் வழியே பார்த்த போது, இளஞ் சோலைப்பூக்கள் இனிதாக மலர்ந்திருந்தன.

தோட்டக்காரன் செடிகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்க, பூந்தொட்டிகள் சீராக அடுக்கப்படாமலிருந்தது கண்ணில் பட்டது.

வீட்டை அலங்கரிப்பதில் உதவலாமென்று அபிராமி அம்மா கூறியது நினைவில் பட, அவரிடம் கூறிவிட்டுத் தோட்டத்தை முதலில் அழகு படுத்த வேண்டுமென்று நினைத்தாள்.

குளித்துத் தயாராகி அவருடைய அறைக்கதவை மெதுவாகத் தட்டியபோது, கதவைத் திறந்தவர், ''வாக்கிங் போகலாமா மித்ரா?'' என்றார் புன்னகையுடன்.

பெரிய தோட்டத்தின் நடுவே இருந்த வீட்டைச் சுற்றிலும், கருங்கல் பரவிய நடைபாதை அமைக்கப்பட்டிருந்ததால், அதிலேயே இருவரும் நடந்தனர். வணக்கம் கூறிய தோட்டக்காரனுக்கு, மித்ராவை அறிமுகப்படுத்தி வைத்தார் அவர்.

வாக்கிங் முடிந்து திரும்பும்போது, ''அம்மா! நான் ஒன்னு சொன்னாத் தப்பா நினைக்க மாட்டீங்களே? தோட்டத்தில் தொட்டியெல்லாம் இன்னும் அழகா அரைவட்டமா, மலர்கள் ஒரு பக்கமா இருக்கறமாதிரி, அங்கங்கே புதுமாதிரி அடுக்கி வைச்சா நல்லாருக்குமே..?'' தயக்கத்துடன் வினவினாள்.

''இதுக்குத்தானா இத்தனை பீடிகை எல்லாம்... இன்னிக்குச் சாயந்திரமே உன் ஐடியாவச் சொன்னீன்னா, தோட்டக்காரனை விட்டு நம்ம ரெண்டு பேருமா சேர்ந்து மாத்தி அமைக்கச் சொல்லலாம்...'' உற்சாகத்துடன் கூறினார் அவர்.

சாப்பிட்டுவிட்டு சுரேன் காரில் கிளம்பிச் செல்லும் வரை அறைக்குள்ளேயே இருந்தவள், பிறகு சாப்பிட்டு விட்டு அபிராமி அம்மாவின் அறைக்குச் சென்று புத்தகங்கள் வாசித்துக் காண்பிக்க ஆரம்பித்தாள்.

பதினோரு மணிக்கு அவர் சத்துமாவுக் கஞ்சி குடிப்பாரென்று - காலையில் வாக்கிங் செல்லும்போது அறிந்திருந்தாள்.



சமையலறைக்குச் சென்று எடுத்து வந்து அவரிடம் கொடுத்துவிட்டு, இந்த வயதிலும் அவர் 'குரோஷா' முறையில் பின்னுவதை வியப்புடன் கவனித்த படியே அவருடைய பீரோவில் புடவைகளை ஒழுங்காக அடுக்கிக் கொண்டிருந்தாள்.

ஆசிரமத்தில் தையல் வேலை பழகி இருந்ததால், ''இங்கே தையல் மிஷின் இருக்கம்மா...?'' ஆர்வத்துடன் கேட்டவளிடம், ''இருக்கே... உனக்கு தைக்கத் தெரியுமா மித்ரா?'' என்றார் அவர்.

''ம்... தெரியும்மா! ஆசிரமத்தில் எங்க வேலையெல்லாம் நாங்களே செய்யப் பழகி இருக்கோம். பிளவுஸ், உள்பாவாடை எல்லாம் கூடத் தைச்சிடுவோம். இனிமே உங்களுக்கும் நானே தச்சுத் தரேன்... ஓரளவு நல்லா தைப்பேன்மா...''

''அப்பாடா! இனிமே தையல்காரரை வரச் சொல்லி, அது சரியில்லை இது சரியில்லைன்னு சொல்ற வேலை மிச்சம்!'' கூறிவிட்டுக் கனிவுடன் சிரித்தார் அவர்.

மதியம் சாப்பிட்டு விட்டு இருவருமே ஓய்வெடுத்தனர்.

அன்று மாலையானதும் அபிராமி அம்மாளை ஒரு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுக்கச் சொல்லி விட்டு - மித்ரா யோசனைகள் கூற - அதன் படியே செய்தார் தோட்டக்காரர்.

இரண்டு மணி நேரத்தில், ஒரு பக்கத் தோட்டம் முற்றிலும் மாறி, அழகாயிருந்தது.

அவளையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்த அபிராமிக்கு, தான் சரியான பெண்ணைத்தான் தேர்வு செய்திருக்கிறோமென்ற பெருமிதம் மனதினுள் அதிகமாய்!

அன்றிரவு, அபிராமி அம்மாவிற்குச் சிறிது நேரம் ஆன்மீகப் புத்தகங்களை வாசித்துக் காண்பித்தாள்.

பிறகு சமையல் தயாராகிவிட்டதா என்று பார்க்கச் சென்ற போதுதான், டைனிங் ஹாலில் அலமாரியிலிருந்த அந்த அழகிய பீங்கான் செட் அவள் கருத்தைக் கவர்ந்தது.

அருகே சென்று ஒரு நிமிடம் அதை ரசித்த போது தான், பின்னாலிருந்து அந்தக் குரல் கேட்டது.

''அதெல்லாம் பாக்கறதோட நிறுத்திக்கணும்... அது எங்க கொள்ளுப் பாட்டி காலத்திலிருந்து இருக்கிற சைனீஸ் பீங்கான் செட்... ரொம்பப் பழமையான ஆன்டிக் பீஸ்! ரொம்பக் காஸ்ட்லி... எடுத்துப் பாக்கறேன்னு உடைச்சிட வேணாம்.'' சுரேனின் குரல் கண்டிப்புடன் கூறியது.

அந்தக் குரலில் திடுக்கிட்டுத் திரும்பியவள், என்ன பதில் கூறுவதென்று புரியாமல் தலையசைத்து விட்டு, வேகமாகச் சமையலறைக்குள் சென்றாள்.

தான் ஏதோ தவறு செய்த மாணவியைப் போலும், அதைக் கண்டிக்கும் ஆசிரியர் போல் அவன் நடந்து கொண்டதையும் நினைத்தால் சிரிப்பாக வந்தது. ஆனால், குறைகள் உள்ளதே மனித குணம் என்பதும் புரிந்தது.

சாப்பிட்ட பிறகு, அபிராமி அம்மாவின் தேவைகளை கவனித்து விட்டு உறங்கச் சென்றபோது, ஆசிரமத்துப் பிள்ளைகளின் நினைவும், அன்னையின்

முகமுமே கண்முன் நிழலாடின.

தன்னுடைய சுதந்திரம் இந்த வீட்டில் பறிபோய் விட்டது போல் ஏனோ தோன்றியது.

ஏதோ ஒரு அந்நியத்தன்மை மனதினுள் படர்ந்து, சுருதி சேராத தம்புராவாய் மனம் தவித்தது.

மறுநாள் காலையில், தோட்டக்காரரிடம் செய்ய வேண்டிய மாற்றங்களைப் பற்றி மித்ரா சொல்லிக் கொண்டு இருந்தபோதுதான், ஜாகிங் போய்விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான் சுரேன்.

அன்றுதான், அவளால் பதட்டமின்றி அவனைக் கவனிக்க முடிந்தது.

ஆறடிக்கும் மேல் உயரத்தில், மாநிறத்தில், வசீகரமான முக அமைப்போடு, பெரிய மீசையுடன் கம்பீரமாக அவன் நடந்து வருவது அழுத்தமாய் கருத்தில் பதிந்தது.

அவன் அருகில் வந்ததும், குழம்பிச் சிவந்திருந்த முகத்தைத் திருப்பி மலர்களின் மேல் பார்வையைப் பதித்தாள் அவள்.

மனம் ஏனோ முதன் முறையாக சஞ்சலத்துடன் பட படத்தது. சுரேன் அவளை ஓரக்கண்ணால் கவனித்து விட்டு வேகமாக உள்ளே சென்று விட்டான்.

'பணக்காரன் என்றாலே மேலே விழுந்து பழகும் பெண்ணினத்தை சேர்ந்தவள்தானே இவளும்! அதுவும் அனாதை வேறு... ஒண்ட இடம் கொடுத்தால் அட்டையாய் ஒட்டிக் கொண்டு விடுவாள்... அதனால் முதலிலேயே அவளைத் தட்டி வைக்க வேண்டும்' என்று அலட்சியமாக எண்ணியது அவன் மனம்!

ஆனால், அவன் எண்ணத்தை மித்ரா அறியவில்லை.

அன்றிரவு அபிராமி அம்மாவிடம் கலந்து பேசி வீட்டில் ஒவ்வொரு அறைக்கும் தகுந்தாற் போல் என்னென்ன வாங்கலாம் என்று பட்டியலிட ஆரம்பித்தாள்.

சம்மர் வகுப்பில் சேர்ந்து, சமையல் கலையும், வீடு அலங்கரிப்பும் பயின்றது இன்று பெரும் உதவியாக இருந்தது.

ஆசிரமத்து வரவேற்பறையை அவளும், சில ஆசிரமப் பெண்களுமாகச் சேர்ந்து அலங்கரித்த அனுபவமும் இப்போது கை கொடுத்தது.

## 4

மறுநாள் காலையில் இருவரும் 'வாக்கிங்' செல்லும் போது எதிரே வந்தான் சுரேன்.

அபிராமியிடம், ''என்னம்மா! தோட்டமே அழகா மாறிடுச்சுப் போல இருக்கு. முனியனுக்கு இந்த மாசம் சம்பளம் கூடப் போட்டுத் தரணும்'' என்றான் உற்சாகமாக.

''நீ சம்பளம் கூடப்போட்டுத் தரதா இருந்தா, மித்ராவுக்குத் தான் தரணும். அவ யோசனையில், இரண்டு பேரும் சேர்ந்து செஞ்சதுதான் இதெல்லாம்...!'' என்றார் அபிராமி சிரிப்புடன்.



ஒரு கணம் முகம் இறுகிவிட பிறகு அவளை யோசனையுடன் ஒரு நொடி பார்த்தவன், தோளைக் குலுக்கிவிட்டு அலட்சியமாக உள்ளே சென்றான்.

மனதிற்குள் நெருஞ்சி முள்ளாய், அவன் பார்வையும், முகமாற்றமும் கீறலை ஏற்படுத்தின.

அவள் பதட்டத்துடன், ''எம்மா இப்படிச் சொன்னீங்க? தோட்டக்காரர் பண்ணினதாகவே இருக்கட்டுமே!'' என்ற போது, ''நான் உண்மையைத்தானே சொன்னேன் மித்ரா! நீ பேசாம இரு.. அவனுக்குத் தெரிஞ்சா என்ன? தப்பா பண்ணியிருக்கே - பயப்படறதுக்கு..?'' என்று முடித்தார் அவர்.

பிறகு கடைக்குச் சென்று, அங்கு ராஜஸ்தான் பொருட்கள் விற்கும் இடத்தில், பெரிய சுவர் அலங்காரப் படம் ஒன்றும், ஜாடிகளும், பூக்களும் வாங்கி எடுத்துக் கொண்டனர்.

வேறு கடையில் பழைய ஓவியங்களையும் வாங்கி விட்டுத் திரும்பும்போது, காரையே அடைத்துக்கொண்டு எல்லாப் பொருட்களும் நிறைந்து இருந்தன

மறுநாள், தோட்டக்காரரை வைத்துக்கொண்டு, ஆணி அடித்து வாங்கியவற்றைப் பொருத்தமான இடமாகத் தேர்வு செய்து, இருவரும் மாட்டினார்கள்.

ஹாலின் உள்ளிருந்து செல்லும்படி, படிக்கட்டுகள் அமைந்திருந்ததால, அதன் இருபுறமும் பெரிய பூச்சாடிகளை வைத்து, பூக்களை அடுக்கி வைத்தனர்.

வீட்டிலிருந்த பெரிய பாங்கிக்காய் பித்தளை ஜாடியையும், பித்தளை வாளியையும் பளபளவென்று தேய்த்து, அடியில் பீடம் வைத்து, அதில் 'பாம்' வகைச் செடிகளை வைத்து, ஹாலில் ஒன்றும் வாசல் வெராண்டாவில் ஒன்றும் வைத்தனர்.

மூன்றே நாட்களில், தோட்டமும் வீடும் மாறிப்போய், தனி அழகுடன் மிளிர்ந்தன.

''ஒரு சின்னப் பெண்ணின் கை வண்ணத்தில், எல்லாமே அழகாயிடுச்சி'' என்று பாராட்டினார் அபிராமி!

''இல்லம்மா! எல்லாமே உங்களாலதான்... நான் என்ன சொன்னாலும், அதைச் செயல்படுத்த, எல்லாமே வாங்கினது நீங்கதானே...! தோட்டக்காரரைச் செய்யச் சொல்லி உற்சாகப்படுத்தினதும் நீங்கதான்!'' என்றாள் மித்ரா முறுவலித்தபடி.

அன்றிரவு, நேரம் கழித்து வந்ததால், சுரேன் எதையுமே கவனிக்கும் மனநிலையில் இல்லை.

மறுநாள் காலையில் ஜாகிங் செல்லக் கிளம்பி இறங்கி வந்தபோதுதான், ஹாலில் செய்திருந்த மாற்றங்களையும், தோட்டத்தின் எழிலையும் கவனித்தான்.

தோட்டக்காரரை அழைத்தவன், ''இதெல்லாம் யார் செஞ்சது முனியா... நீயா?'' என்று கேட்டான்.

''ஆமாங்கய்யா! நானும், புதுசா வந்திருக்கற அந்தப் பொண்ணும்தான் செஞ்சோம். உள்ளே கூட அம்மாவும் அவங்களும்தான் எல்லாம் வாங்கிட்டு வந்து என்னை மாட்டச் சொன்னாங்க... எப்படிங்கய்யா இருக்குது?'' வெகுளியான சிரிப்புடன் கேட்டான்.

''நல்லாருக்கு... அதான் கேட்டேன்! நாலு நாள்லே வீடே மாறிடுச்சு... இன்னும்

ஏதாவது செடிங்க வேணும்னா அம்மாகிட்ட சொல்லி வாங்கி வை'' என்று கூறிச் சென்றான்.

அன்று காலையில், எப்போதும் போல் இருவரும் வாக்கிங் செல்லும் போது, சுரேன் தோட்டத்தைப் பற்றி விசாரித்ததையும், பாராட்டியதையும் முனியன் அபிராமி அம்மாவிடம் கூறினான்.

முகத்திற்கு நேரே ஒருவரைப் பாராட்டுவதற்குக்கூட தனி மனம் வேண்டுமென்று தோன்றியது மித்ராவிற்கு!

டிபன் சாப்பிடும் போது அபிராமி அம்மாள், ''என்ன சுரேன்? ஹால அலங்காரமெல்லாம் பாத்தியா? தோட்டத்தைக்கூட மாத்தி அமைச்சாச்சு... பாத்துட்டு நீ ஒண்ணுமே சொல்லலை!'' என்றார் கேள்வியாக.

''நல்லாருக்கும்மா... வேற என்ன சொல்லணும்?'' உணர்ச்சியின்றிக் கேட்டுவிட்டு, மித்ரா சமையலறைக்குள் சென்றதும் வேகமாக அவரிடம் திரும்பினான்.

''என்னம்மா... வந்தவுடனே ரொம்ப இடம் கொடுக்கறீங்க. எல்லாமே அவ இஷ்டப்படி செய்யாதீங்க. எப்பவுமே வேலைக்காரங்களைத் தட்டி வைக்கணும்... ஓவரா இடம் கொடுத்தா, தலைக்கு மேல ஏறி ஆட ஆரம்பிச்சிடுவாங்க!'' என்று கூறிவிட்டுத் திரும்பினால், அங்கு சங்கமித்ரா வெளிறிய முகத்துடன் நின்றிருந்தாள்.

உள்ளத்தை யாரோ பலமாகக் கிள்ளியதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது அவன் பேச்சு!

வேகமாகத் திரும்பிச் செல்கின்றவளைப் பார்த்து, உதட்டைப் பிதுக்கி தோள்களைக் குலுக்கி விட்டு சாப்பிட ஆரம்பித்தான் சுரேன்.

அறைக்குள் சென்ற மித்ராவுக்கு இதயம் கோபத்தில் படபடத்தது. இவனுக்கு மனிதர்களைப் பற்றி நல்லதாகவே நினைக்கத் தோன்றாதா என்ற வேட்கை ரணமாகப் படிந்தது.

பிறகு திலகாவிற்கும் அன்னைக்கும் தனித்தனியே கடிதங்கள் எழுதி வைத்தாள்.

மனதிற்கு அமைதி தரும் விதமாக அன்னை பரிசளித்த விவேகானந்தரின் அறிவுரைகளைப் படித்தபோது, அந்தப் புத்தகம் சஞ்சலத்தை தூர விரட்டி மனதை செப்பனிட்டுத் தந்தது.

அன்றிலிருந்து சுரேன் இருக்கின்ற பக்கமே, தேவையிருந்தால் கூட அவள் செல்வதில்லை.

சுரேனின் பேச்சிற்குப் பிறகுதான், தான் அனாதை என்ற உணர்வே மனதில் மெல்லத் தலை தூக்க ஆரம்பித்தது.

நெஞ்சம், பழைய நந்தவன நாட்களுக்கு ஏங்கித் தவித்தது.

**நா**ட்கள் வேகமாக நகர்ந்தன. இப்போதெல்லாம், 'கோகுல'த்தில் அவள் வாழ்க்கை இயல்பாகப் பொருந்திவிட்டது. ஒரு விதத் தாளலயத்துடன், அவளுடைய வேலைகள் வழக்கம் போல் நடந்தன.

வீடே முற்றிலும் மாறிப்போய் அழகாகி, தோட்டத்தில் மலர்கள் பூவிதழ்



விரித்துச் சிரித்து புதுராகம் பாடின.

அன்று, அன்னையிடமிருந்து கடிதம் வந்திருந்தது.

திலகாவும் ஆசிரமத்துக் குழந்தைகளும், அவளை மிகவும் விசாரித்திருந்தனர்.

அடுத்த மாதத்தில் ஒரு நாள் லீவு கேட்டு, ஆசிரமத்திற்குச் சென்று எல்லோரையும் பார்த்து வர வேண்டும் என நினைத்துக் கொண்டாள் சங்கமித்ரா.

அந்த வாரத்திலேயே, அபிராமியின் தங்கையின் குடும்பத்தினர் சென்னையிலிருந்து விடுமுறைக்காக வீட்டிற்கு வந்திருந்தனர். அதனால், மித்ராவுக்கு, அந்த வாரமே, குற்றாலத்திற்குச் சென்று, அருவியில் குளிக்கும் வாய்ப்புக் கிடைத்தது.

எல்லோரும் அவளையும் அழைத்துக் கொண்டு, ஐந்தருவிக்குச் சென்றனர்.

மலையன்னையின் மடியில் குழந்தையைப் போல் கலகலவெனச் சிரித்துச் சிதறும் அருவிப் பெண் பிரமிப்பை ஏற்படுத்தினாள்.

முதன் முதலாக, அருவியைப் பார்க்கும்போது, பரவசமாக இருந்தது சங்கமித்ராவுக்கு!

உயர்ந்து வழியும் வெண்மலை அருவி, மென்மையான சாரலுடன் பன்னீர் தூவிச் சிதறக் குளிக்கும் போதுதான், தண்ணீர் வேகமாகத் தலையில் விழுவது புரிந்தது.

அருவி என்றால் பூஞ்சிதறலாய், 'ஷவர்' போலத் தலையில் வழியும் என்று எதிர்பார்த்திருந்தவளுக்கு, படபடவென்று தண்ணீர் தலையில் கொட்டியபோது, அதுவும் ஒரு புதுவித அனுபவமாகவே இருந்தது.

வீட்டுக்குத் திரும்பிவந்து, தன் அறையில் மித்ரா தலை காயவைத்துக் கொண்டிருந்தபோதுதான், அபிராமி அம்மாவின் தங்கை மகள் துர்கா உள்ளே வந்தாள்.

''மித்ரா! எவ்வளவு நீளமான தலைமுடி உங்களுக்கு...!'' என்று ஆச்சரியப்பட்டவள், அருகே வந்து அவள் முடியைத் தொட்டு ரசித்தாள்.

''நீங்க ரொம்ப அழகு மித்ரா'' என்று புன்னகையுடன் கூறவும் கூச்சத்துடன் தலைகுனிந்த சங்கமித்ரா நிமிர்ந்து, ''நீங்களும்தான் துர்கா'' என்றாள் மென்னகையுடன்.

''எனக்கும் உங்களை மாதிரி வெள்ளையா, உயரமா, அழகா, இப்படி நீளமான தலைமுடியோட இருக்கணும்னு ஆசைதான்! ஆனா, கடவுள் என்னை வேற விதமாப் படைச்சிட்டாரே'' என்று கூறிக் குறும்புடன் கண் சிமிட்டிச் சிரித்தபோது, அவளை ஆராயத் தோன்றியது மித்ராவுக்கு!

மாநிறத்துக்கும் மேல், பொதுவான உயரத்துடன், அழகாப் 'பாப்' வெட்டிக்கொண்டு, துர்காவும் அழகாகவே இருந்தாள்.

சங்கமித்ரா தன் மனதை மறைக்காமல் வெளிப்படுத்தியபோது, புன்னகையுடன் ''நன்றி!'' என்றாள்.

தான் சென்னையில் ஃபைனல் இயர் 'டிகிரி' படித்துக் கொண்டு இருப்பதாகக் கூறினாள் அவள்.

''வீடு, தோட்டம் எல்லாமே உங்களோட கை வண்ணமாமே! நல்லா இருக்கு

நான் போன தடவை வந்தப்பவே, இதப் பத்திப் பெரியம்மா கிட்டச் சொல்லி, எல்லாம் மாத்தணும்னு நினைச்சேன். எப்படியோ நீங்க செஞ்சிட்டீங்க!'' என்று கலகலப்பாகப் பேசுபவளை, மித்ராவுக்கு மிகவும் பிடித்தது.

தோழமைக்கு ஏங்கி இருந்த மனம், படர இடம் தேடித் தவித்த கொடி, ஒரு கிளை கிடைத்தவுடன் பற்றிக் கொள்வதைப் போல் அவளுடன் கை கோர்த்தது.

அந்த வாரம் அனைவருமே கோவிலுக்குச் சென்ற போது, துர்கா, விடுமுறை முழுவதும் இங்கு இருக்கப் போவதாகக் கூறியதும், மித்ராவுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

ஒரு வாரத்தில், திலகாவைப் போல் துர்காவும் நெருங்கிய தோழியாக மனதில் நீங்காத ஒரு இடத்தைப் பிடித்துக் கொண்டாள்.

5

**பி**றகு, வீட்டிற்கு வந்திருந்த உறவினர்கள் எல்லாரும் சென்று விட, துர்கா மட்டுமே தங்கி இருந்தாள்.

அபிராமி அம்மாவிடம் கேட்டுக் கொண்டு, மித்ராவை அழைத்துக் கொண்டு அடிக்கடி டவுனுக்குப் போய்வர ஆரம்பித்ததில், இப்போதெல்லாம் இருவரும் ஒருமையில் பேசிப் பழக ஆரம்பித்திருந்தனர்.

ஒரு நாள் சங்கமித்ரா அப்படிச் சென்றபோதுதான், துர்காவின் காதலன் விவேக்கைப் பார்க்க நேர்ந்தது.

அன்று, துர்காவிற்கு வேண்டிய பொருட்களை வாங்கி விட்டு, இருவரும் வெளியே வந்தபோது, பக்கத்து ஓட்டல் வாசலில் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

புன்னகையுடன் அவனருகில் சென்ற துர்கா, அவனை மித்ராவுக்கு அறிமுகப்படுத்தினாள்.

முதலில், மித்ரா ஒன்றுமே புரியாமல், 'யாரிவன்' என்ற பாவனையுடன், மெல்ல வணக்கம் கூறினாள்.

துர்கா அவளிடம் திரும்பி, ''இது யாருன்னு தெரியுமா மித்ரா? என்னோட சீனியர்... பெயர் விவேக்! ம்... நாங்க ரெண்டு பேரும் விரும்பறோம்... வீட்டுல தெரியாது. பெரியம்மாகிட்டச் சொல்லிடாதே. ப்ளீஸ்...!'' என்று காதோரம் கூறவும், ஒரு நிமிடம் அதிர்ந்து விட்டாள் மித்ரா. மெதுவாக, இதில் தனக்கு ஏதாவது தவறான பெயர் வந்து விடுமோ என்ற பயம் மனதில் எழ, துர்காவிடம், ''எனக்குப் பயமா இருக்கு துர்கா. இது தப்பில்லையா? அம்மாவுக்கு இந்த விஷயம் தெரிஞ்சா, ஏன் முன்னாலேயே சொல்லலைன்னு என்னைத் திட்டமாட்டாங்களா?'' என்றாள் சங்கடத்துடன்.

''அதெல்லாம் ஒண்ணும் பயப்படாதே, மித்ரா! நானே பயப்படலை. எனக்கும் படிப்பு முடிஞ்சிடுச்சி. இந்த விஷயம் வீட்டுக்குத் தெரிந்துதானே ஆகணும். விவேக்குக்கு வேலை கிடைக்கணும்னுதான் நாங்க இத்தனை நாளாக்



காத்திட்டு இருந்தோம். இப்ப பெங்களூரிலே நல்ல வேலை கிடைச்சிருக்கு. விவேக்கோட சொந்த ஊரும் மதுரைதான். என்னை நேராப் பாத்து விஷயத்தைச் சொல்லத்தான், இன்னைக்கு இங்க வந்திருக்காரு... நான் தான் 'செல்'லுல பேசி, வரச் சொன்னேன்...!'' குதூகலத்துடன் வந்தது அவள் குரல்!

''ஆல் தி பெஸ்ட்!'' என்று சிறு முறுவலுடன் வாழ்த்தினாள் மித்ரா.

பிறகு ''நீங்க பேசிட்டு இருங்க... நான் பக்கத்துல இருக்கிற கோவிலுக்குப் போயிட்டு வந்துடறேன்'' என்று கூறிவிட்டு, அவர்களுக்கிடையே தான் தடையாக இருக்க வேண்டாம் என்ற எண்ணத்துடன் கோவிலுக்குச் சென்றாள்.

கோவிலில் சாமி கும்பிட்டுவிட்டு, பிரகாரத்தில் அமர்ந்து யோசித்துக் கொண்டு இருந்தபோதுதான், திடீரென்று யாரோ தன் அருகில் வேகமாக வருவது தெரிந்தது.

நிமிர்ந்தால், எதிரே சிவந்த கண்களுடனும், கோபம் நிறைந்த முகத்துடனும் சுரேந்திரன் நின்றிருந்ததைக் கண்டபோது, அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை! முகம் பயத்தில் வெளிறியது!

''ஏய்! இதுக்காகத்தான் தினமும் அவளை 'டவுனுக்கு' அழைச்சிட்டு வரியா? நீ என்ன அவளுக்குக் கூட்டா? ஏன், உனக்கு எவனும் இளிச்சவாயன் கிடைக்கலையா?... இங்க வந்து தனியா உக்காந்திருக்கே? ஓ! அவன் இங்க வந்து உன்னைத் தனியா மீட் பண்ணுவானா? வெக்கமா இல்லை ரெண்டு பேருக்கும்?'' என்று கோபத்துடன் கத்தியபோது, மெதுவாக எழுந்த மித்ராவுக்கு, நெருப்பின் மீது நிற்பது போன்று தகித்துக் கை கால்கள் வெலவெலத்துப் போயின.

''நான்... எனக்கொண்ணும் தெரியாது... துர்கா...''

இயலாமையோடு அவளைப் பார்த்தபோது, இவ்வளவு நேரம் விறாப்புடன் பேசியவள், அண்ணனைக் கண்டதும், பயத்துடன் தலைகுனிந்து, அமைதியாக நின்றாள்.

தான் என்ன சொல்லி, அவனுக்குப் புரிய வைப்பது என்று புரியாமல் தவித்து, பிறகு கோபத்துடன் செல்லும் அவனைப் பின் தொடர்ந்து சென்ற மித்ராவை, துர்காவும் மெல்லத் தொடர்ந்தாள்.

**வீ**ட்டிற்குள் சென்றதும், அபிராமி அம்மாவின் அறைக்குள் அவர்களிருவரையும் அழைத்துச் சென்று, கதவைச் சாத்திவிட்டுக் கோபத்துடன் தாயிடம் திரும்பினான் சுரேன்.

''உங்களோட தங்கச்சிப் பொண்ணும், உங்க சம்பாளியனும் 'டவுன்'ல என்ன பண்ணிக்கிட்டு இருந்தாங்க, தெரியுமா? ஒரு ஆணோட இவளைத் தனியா விட்டுட்டு, அவங்க கோவில்லே உட்கார்ந்து புரோக்கர் வேலை பாக்கிறாங்க. எத்தனை நாளா இது நடக்குதுன்னு தெரியலை... கேளுங்க!'' என்று கூறிவிட்டுக் கோபமும் அலட்சியமும் கலந்த பாவனையில், 'பேண்ட் பாக்கெட்'டில் கைவிட்டபடி, கண்களில் அளவிட முடியாத சீற்றத்துடன் சுரேன் நிற்கக் கண்டதும், மித்ராவுக்கு பயத்தில் மனம் காற்றாடியாய்ப் படபடத்தது.

அபிராமி அம்மாவுக்கும் கோபம் வந்தாலும், ''என்ன துர்கா! சுரேன் சொல்றது

உண்மையா...? ஏன் இப்படிப் பண்ணினே? இதுலே பாவம்... மித்ராவை வேற துணைக்கு அழைச்சிக்கிட்டு... எனக்கு, என்ன நடந்ததுன்னு உடனே தெரியணும்'' என்றார் குரலில் கண்டிப்புடன்.

துர்கா மெதுவாக நிமிர்ந்து, ''பெரியம்மா! இதுக்கும், மித்ராவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் ரெண்டு வருஷமா விவேக்கை விரும்பறேன். அவர் எனக்கு சீனியர். இப்போ, அவர் எம்.சி.ஏ முடிச்சிட்டு, பெங்களூர்ல வேலை கிடைச்சி அங்கே போகப் போறார். அதச் சொல்லத்தான் இன்னிக்கு வந்தார்!

அவருக்கும் மதுரைதான் சொந்த ஊர். இன்னிக்கு அரை மணி நேரத்துக்கு முன்னாடிதான் மித்ராவுக்கே அறிமுகம் செஞ்சேன்! அவங்கதான் எங்ககூட வராம, கோயில்ல வெயிட் பண்றேன்னாங்க! அதுக்குள்ளே அண்ணா வந்து..!'' என்றபடி சங்கடத்துடன் சுரேனையும், அபிராமி அம்மாளையும் மாறி மாறிப் பார்த்தாள் துர்கா!

''இது உங்க அம்மாவுக்குத் தெரியுமா..? தப்பில்லையா, இது மாதிரி பழகுறது...? அப்பா அம்மாகிட்டச் சொல்லி, முறையா ஏற்பாடு செய்ய வேண்டியது தானே? அதுவும் இங்க வந்து... எங்க பாதுகாப்பில் இருக்கும்போது... இதெல்லாம் சரியில்லை துர்கா! நான் இன்னிக்கு உங்க அம்மாகிட்டப் பேசறேன்'' என்றார் அபிராமி அம்மாள் கோபமாக.

துர்கா பேச ஆரம்பித்த உடனே, கவனிக்க ஆரம்பித்த சுரேன், அவள் சொல்லி முடிக்கும் வரை விழிகளை அவள் மீதிருந்து ஒரு நொடி கூட விலக்கவில்லை.

பிறகு, அபிராமி அம்மா பேசி முடித்ததும், ''அம்மா! சித்திகிட்ட இன்னிக்குப் பேசவேண்டாம். நாளைக்கு அந்தப் பையனைப் பத்தி, நான் விசாரிக்கிறேன். ஏய்.. அவன் அட்ரஸ் குடு! என்னன்னு தெரிஞ்சுட்டு அப்புறமா, நாளைக்கு நைட் பேசலாம். அதுவரைக்கும் இவ எங்கயும் போக்கூடாது'' என்றவன், வேகமாக வெளியில் சென்று விட்டான்.

மெதுவாக, அவள் அருகில் வந்த துர்கா, ''ஸாரி மித்ரா! இப்படி ஆகும்னு நான் நினைக்கலே! என்னாலே, உனக்குத் தான் கெட்ட பேர்... தேவையில்லாம!'' என்றவள் திரும்பினாள்.

''பெரியம்மா! மித்ரா மேல எந்தத் தப்பும் இல்ல.. அது தெரியாம, அண்ணா அவளை ரொம்பத் திட்டிட்டார்... நீங்கதான் அண்ணனுக்கு புரியவைக்கணும்'' என்று பெரியம்மாவிடம் கேட்டுக் கொண்டாள்.

மித்ரா எதுவும் பேசாமல், அந்த அறையை விட்டு வெளியேறி, தன் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டாள்.

சுரேனுடைய கோபமான பார்வையும், சுடு சொற்களும், அவள் மனதில் கோபக்கனலை மூட்டுவதாய்! தன்னை நல்லவிதமாகவே அவன் நினைக்க மாட்டானா, என்ற ஏக்கம், ஒரு சுவாசச் சிறகாய்!

தான் என்னதான் நல்லவிதமாக நடந்தாலும், ஆரம்பத்திலிருந்தே, அது அவன் பார்வைக்குத் தவறாகவே தோன்றுவதை எண்ணி மனம் வலித்தது.

காயம்பட்ட பறவையாய், மனம் சிறகொடிந்து, பறக்க இயலாமல் தவித்தது.

அவள் ஏதோ யோசனையிலிருந்தபோது, கதவைத் திறந்து வந்தார் அபிராமி அம்மாள்.



''தப்பா நினைக்காதேம்மா, மித்ரா! நடந்தது நடந்து போச்சு..! ஆனா, நீங்க ரெண்டு பேருமே, தப்பு பண்ணுற மாதிரி பொண்ணுங்க இல்லைன்னு எனக்குப் புரியுமனாலும் காதலிச்சு, ஏமாந்தப்பட்ட வலி எனக்குத் தான் தெரியும். அது, சுரேனுக்கும் தெரிஞ்சதினாலேதான் பிரச்சனையே!'' என்று கூறி நிறுத்திவிட்டு, ஒரு பெருமூச்சுடன் தொடர்ந்தார்.

''நானும் அந்தக் காலத்துலே காதலிச்சு, எங்க அப்பா அம்மா சம்மதத்தோடதான் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நாங்க ரெண்டு பொண்ணுங்கதான் எங்க வீட்டுல...! ஆனா, என் வாழ்க்கை சரியா அமையலை... அவர், என்னை, சுரேன் கைக் குழந்தையா இருக்கும்போதே விட்டுட்டு, வேற ஒரு பொண்ணோட கேரளாவுக்குப் போயிட்டாரு...

இதெல்லாம் என் அப்பா வழிச் சொத்து. தன்னோட தொழிற்சாலையையும், வீட்டையும் என் பேருக்கு எழுதி வைச்சிட்டு, அதுக்கு ஈடான பணத்தைத் துர்காவோட அம்மாவுக்குக் கொடுத்தாரு, எங்கப்பா! நான் ஏன் இன்னும் பூவோடயும் பொட்டோடயும் இருக்கேன்னு நீ நினைக்கலாம்...

என்னை மதிக்காமல் விலகிப்போன ஒருத்தருக்காக, நான் எதையுமே இழக்கக்கூடாதுன்னு சுரேன் கண்டிப்பா சொல்லிட்டான்! இப்ப அவர் உயிரோட இருக்காரான்னு கூட எனக்குத் தெரியாது. அதனால, எப்பவுமே காதல், கல்யாணம் இதிலெல்லாம் சுரேனுக்கு நம்பிக்கையே இல்லாம, சுத்தமாப் பிடிக்காமப் போயிடுச்சு...

'கல்யாணமே பண்ணிக்காம, உங்களோடவே இருந்திடறேன்'னு என்கிட்டே அடிக்கடி சொல்வான். அவன் மனசுல படிஞ்ச அந்த ரணம்தான், இன்னிக்கு அவனை இப்படிக் கோபப்பட வெச்சிருக்கு!

அதோட துர்காவுக்கு ஏதாவது ஒண்ணுன்னா, நாம தானே இப்பப் பொறுப்பு! இந்த விஷயத்தில் நாம யோசிச்சு ஜாக்கிரதையாதான் முடிவெடுக்கணும். இந்தக் குடும்பத்துல இன்னொரு தடவை, தப்பு நடந்திடக் கூடாது.''

எங்கோ பார்த்தபடி கூறியபோது, அவருடைய மெலிந்த குரலும், ஓய்ந்த தோற்றமும் மித்ராவின் மனதைக் கசக்கிப் பிழிந்தன.

அவள், ஆதரவுடன் முன்னால் வந்து அவர் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''துர்காவும் நல்ல பொண்ணும்மா! அவளுக்கு நல்ல வாழ்க்கை தான் அமையும். நல்லவங்க எல்லாருக்குமே கெடுதல்தான் நடக்கும்னு, நாம ஏன் தப்பா நினைக்கணும்? நிச்சயமா, எனக்கு விவேக்கைப் பாத்தா நல்லவராத்தான் தோணுது'' என்றாள்.

தன் சோகங்களுக்குத் தற்காலிக விடை கொடுத்து, மெல்லிய முறுவலுடன் நிமிர்ந்தார் அபிராமி.

''அந்த பையன் எப்படி? நல்லவனாத் தெரியறானா..? துர்காவுக்குப் பொருத்தமா இருக்கானா..? இருந்தாலும் நல்ல விசாரிக்கணும்..!'' ஆவலுடன் கேட்டார்.

''அதான் உங்க பையன் விசாரிக்கிறேன்னு சொல்லியிருக்காரே..! கவலையை விடுங்கம்மா! எனக்கு என்னவோ, அவரைப் பாத்தா, தப்பா எதுவும் தோணலை. நீங்கெல்லாம் பாத்துப் பேசி, அப்புறமா முடிவெடுங்க!'' என்றாள் முறுவலித்தபடி!

"சுரேன் ஏதாவது கோபமாய் பேசி இருந்தா, நீ தப்பா எடுத்துக்காதே மித்ரா! துர்கா மேல இருக்கிற அக்கறையினால தான், அவன் அப்படிப் பேசிட்டான்! இருந்தாலும் உன்னைத் தப்பாப் பேச அவனுக்கு எந்த உரிமையும் இல்லைதான்! இதுபத்தி, நானே சுரேன் கிட்டப் பேசறேன்" கூறிவிட்டு எழுந்து போனார்.

## 6

அபிராமி அம்மாவின் வாழ்க்கையில் இவ்வளவு துக்கங்கள் இருக்குமென்று அவளால் நினைத்துப் பார்க்கக்கூட முடியவில்லை.

சுரேனின் அப்பா, வெளியூர்ல இருக்கிறார் என்றே அவள் நினைத்திருந்தாள்.

இந்தக் கஷ்டத்திலும், தைரியமாக நின்று, மகனை வளர்த்து, இந்த அளவுக்கு உயர்த்தி இருக்கும் அவரை நினைத்தால், மனதில் ஒரு பெருமிதம் வந்தது.

சுரேனின் போக்கில் நியாயம் இருந்தாலும், தன் விஷயத்தில், அவன் நடந்துகொண்டது மனதை ஏனோ மிகவும் பாதித்தது!

அதை மட்டும் சரி என்று, மனம் ஒத்துக் கொள்ள மறுப்பதாய்!

தன்னைப் பற்றித் தவறாகப் பேசும் உரிமையை, யார் இவனுக்குத் தந்தது? என்ற கோபம் மனதில் படர்ந்தது.

சிட்டுக் குருவியாய், ஆசிரமத்தில் சுற்றித் திரிந்த நாட்கள் நினைவில் மோதி, சோகத்தை விதைத்தன.

சுரேனிடம், அபிராமியும் இதையேதான் கேட்டுக் கொண்டிருந்தார்.

"நீ பேசினதெல்லாம், துர்கா சொன்னா! என்னதான் சொன்னாலும், அந்தப் பெண்ணைத் திட்டறதுக்கோ, கண்டிக்கவோ நமக்கு உரிமை கிடையாது சுரேன்! அது யார் வீட்டுப் பொண்ணோ..? நம்ம கிட்ட வேலைக்கு வந்திருக்கிறா என்ற ஒரே காரணத்துக்காக, எல்லா உரிமையையும் நாமே எடுத்துக்க முடியாது. அவ நல்ல பொண்ணுப்பா...! துர்கா சொன்னதைக் கேட்டே இல்லை... அந்த இடத்தில நான் இருந்தாலும், இதைத் தான் செஞ்சிருப்பேன்... அப்ப நான் மோசமானவளா...?" தெளிவாகக் கேட்டார்.

சுரேன், ஏதோ யோசனையில் ஆழ்ந்தபடியே, அபிராமி அம்மாள் கூறுவதைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

"அம்மா! எனக்கு துர்காவை யாரோ ஒரு ஆணோட பார்த்த உடனே ஒண்ணுமே புரியலை... தாங்க முடியாத ஆத்திரம் வந்தது.. அதான்! அவ கோயில்ல காத்திருந்தப்போ, அவதான் இவளுக்குத் தூது போறாளோன்னு நினைச்சிட்டேன். அங்க இருந்த சூழ்நிலை அப்படி! அங்க யாரா இருந்தாலும் - நீங்களா இருந்தாக் கூட இதையேதான் செஞ்சிருப்பீங்க!" என்று கூறிவிட்டுத் திரும்பிக் கொண்டான்.

ஆனால் மனம், செய்த தவறை இடித்துரைத்தது.

அவன் பிடிவாதம் தெரிந்ததால், ஒரு பெருமூச்சுடன் எழுந்தார் அபிராமி.

"சரிப்பா! நீ அந்தப் பையனைப் பத்தி விசாரிச்சுட்டு, அப்புறமா சித்திக்கு.. ஃபோன் பண்ணிப் பேசு" என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குச் சென்றார்.



அன்று, இரவு சாப்பிடும்போது, சங்கமித்ரா அவன் பார்வையில் படவே இல்லை.

அவன் வீட்டில இருக்கும்போது, அனாவசியமாக அவள், தன் அறையை விட்டு வருவதே இல்லை.

சாப்பிட்டுவிட்டு யோசனையுடன் அபிராமியின் அறைக்கு வந்தான் சுரேன்.

"அம்மா! நம்ம அலுவலக ஊழியர்கள் ரெண்டு பேரை விட்டு, நான் விசாரிச்சிட்டேன்! அந்த விவேக், அவங்க வீட்டுக்கு ஒரே பையனாம்... எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாதவனாம்...! ரொம்ப நல்ல குடும்பம்னு சொன்னாங்க! அப்பாவும், அம்மாவும் மதுரையிலேயே சொந்த வீட்டில இருக்காங்களாம்... இந்தப் பையன் மட்டும் பெங்களூர் போறானாம்... இனிமேல்தான் கல்யாணத்துக்குப் பார்ப்பாங்க போலிருக்கு! நாளைக்கே நீங்க சித்திக்கு ஃபோன்ல பேசுங்க!" யோசனையுடன் கூறினான்.

அவரும், "சரி, சுரேன்! நான் பேசறேன். அப்புறம் கடவுள் விட்ட வழி... நாம என்ன செய்ய முடியும்? நல்லதே நடக்கும்னு நினைப்போம்...!" என்றார்.

மறுநாள், சென்னைக்கு ஃபோன் செய்து விபரத்தைக் கூறியவுடனே அன்றிரவே துர்காவின் அம்மாவும், அப்பாவும் கிளம்பி வந்துவிட்டனர்.

அவர்கள் வந்தவுடன் வீட்டில் பெரும் விவாதங்களும், வாக்குவாதங்களும் நடந்தன.

வீணாக அவர்களை தர்மசங்கடப்படுத்த வேண்டாம் என்ற உணர்வில், தன் அறைக்குள்ளேயே இருந்தாள் மித்ரா.

மதியம் சாப்பிடும் நேரம், அறைக் கதவு திறக்க, வேகமாக உள்ளே வந்து, அவள் கைகளை மகிழ்ச்சியுடன் பிடித்துக் கொண்டாள் துர்கா.

அம்மா அப்பா இருவரும், கடைசியாகத் தன் காதலை அங்கீகரித்து விட்டதை, உற்சாகம் பொங்கக் கூறினாள்.

மித்ராவுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அன்றிரவே அவர்கள் மூவரும் புறப்பட்டு, சென்னைக்குச் சென்றுவிட்டனர்.

பிரியாவிடைபெற்று துர்கா போனதிலிருந்து அவள் மனதில் வெற்றிடம் ஒன்று உருவாக, நெடுநாள் பழகிய தோழியைப் பிரிந்தது போல், இதயம் மௌன சோகத்தில் ஆழ்ந்தது.

கட்டாயம் தன் திருமணத்திற்கு வரவேண்டுமென்று அவளிடம் கூறிச் சென்றாள் துர்கா.

அந்த ஞாயிறன்று, அலுவலகத்திலிருந்து சுரேனின் காரியதரிசி லேகா வீட்டிற்கு வந்திருந்தாள்.

அவசரமாகச் செய்ய வேண்டியிருந்த ஒரு வேலையை, அன்று முடித்துவிடலாம் என்று அவளை வரச் சொல்லியிருந்தான் சுரேன்.

வீட்டிற்குள் அவள் வரும்போதே, அபிராமி அம்மா அவளை வரவேற்று, முன்புறமிருந்த அலுவலக அறையில் அமரச் சொன்னார்.

சுரேனை அழைத்துச் சொல்லிவிட்டு, மித்ராவிடம் ''வாம்மா, நாம போய்த் தைக்கலாம். அது, சுரேனோட செகரட்டரி லேகா! ஏதோ வேலையா சுரேன் வரச் சொல்லி இருக்கான் போல இருக்கு. அதான் வந்து இருக்கா'' என்றார்.

பிறகு ''மறந்தே போயிட்டேன் மித்ரா! சமையல் காரம்மா கிட்டச் சொல்லி, அவங்களுக்குக் காபியும் ஏதாவது டிபனும் சொல்லிட்டு வரியா?'' என்று கேட்கவும் ''சரி!'' என்று கூறிவிட்டுக் கிச்சனுக்குச் சென்றாள் மித்ரா.

சமையல்காரம்மாவிடம் சொல்லி திரும்பிய போது, அவர், அவளிடம் ஒரு உதவியைக் கோரினார்.

''எம்மா! நீயே கொண்டுபோய்க் கொடுத்திடேன். எனக்குக் கொஞ்சம் வேலை இருக்கு'' என்றபடி தட்டில் வைத்துக் கொடுக்க அதை எடுத்துக் கொண்டு சென்றாள்.

அறைக் கதவைத் தட்டிவிட்டு, உள்ளே நுழைந்தாள். சுரேன் ஏதோ டிக்டேட் செய்ய, லேகா எழுதிக் கொண்டு இருந்தாள்.

அவளைக் கண்டதும் லேசாகப் புருவம் உயர்த்திய சுரேன், ஒன்றும் கூறாமல், கொண்டு வந்த தட்டை மேசையில் வைக்கச் சொல்லி, சைகை காட்டினான்.

அப்போதுதான், அந்தப் பெண்ணை நன்றாகக் கவனித்தாள் மித்ரா.

அளவுக்கு மீறிய ஒப்பனையும், கவர்ச்சியான உடையும் அணிந்து வித்தியாசமாகத் தெரிந்தவளுக்கு, முதல் பார்வையிலேயே, தன்னை ஏனோ பிடிக்கவில்லை என்பது மித்ராவுக்கு நன்றாகத் தெரிந்தது!

அபிராமி அம்மாவுடன் அமர்ந்து புத்தகம் படித்துக் காட்டுவதிலும், குரோஷா பின்னுவதிலும், பொழுது அமைதியாகப் போனது.

மதியச் சாப்பாடு தயாராகி விட்டிருந்தால், சுரேனையும் அந்தப் பெண்ணையும் சாப்பிட அழைக்கலாம் என்று சமையலறைக்குச் சென்று பார்க்கச் சொன்னார் அவர்.

அவள் வெளியே வந்தபோது, அங்கு வந்த சுரேன், அவளைக் கண்டதும், ''ஒரு நிமிஷம்'' என்று நிறுத்தி, லேகாவுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பிக்கும்படி கூறினான்.

லேகாவை அழைத்துச் சென்று, விருந்தினர் அறையில் காத்திருக்க வைத்துவிட்டு, சமையல் தயாராக இருக்கிறதா என்று பார்க்கச் சென்றாள்.

இன்றுதான் சுரேந்திரன் தன்னிடம் ஒரு வார்த்தை நேரிடையாக நல்ல முறையில் பேசி இருக்கிறான் என்ற எண்ணம் உள்ளத்தில் துளிர்த்தது!

அதே யோசனையுடன், கிச்சனிலிருந்து வெளியே வந்தபோதுதான், வேகமாக எதுவோ கீழே விழுந்து உடையும் சத்தம் கேட்டது.

பீங்கான் போல் இருந்ததால், பதறிப் போய்ப் பார்த்த போது, அலமாரியில் இருந்த பீங்கான் செட்டிலிருந்து ஒரு பாத்திரத்தை, லேகா கீழே போட்டு உடைத்திருந்தாள்.

''அச்சச்சோ!'' என்றபடி குனிந்து, ஒரு உடைந்த துண்டை, மித்ரா எடுத்தபோதுதான், கோபத்துடன் சுரேன் உள்ளே வந்தான்.

கீழே அமர்ந்து, உடைந்த துண்டுகளைச் சேகரித்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்தபோது, அவனுடைய கோபம் எல்லை கடந்தது!



''ஏய்! அறிவில்லை உனக்கு... அன்னிக்கே சொன்னேன், அதை எடுக்காதேன்னு! இதோட அருமை தெரியுமா உனக்கு! இதை எல்லாம் நீ பாத்துக் கூட இருக்கமாட்டே... இப்ப இத உடைச்சி! சே... இந்த அம்மாவுக்குத் தராதரமே தெரியாது. வேலை செய்யறவங்களை வைக்க வேண்டிய இடத்தில் வைக்கணும்'' உறுமினான்.

'நான் உடைக்கவில்லை' என்று கூற அவள் வாயெடுக்கும் போதே இடையிட்டாள் லேகா.

''ஸாரி ஸார்! ஆசையாப் பாத்துட்டு இருந்தேன்... அவங்கதான் அதைக் கையிலே எடுத்துக் காட்டறேன்னு, கீழே போட்டு உடைச்சிட்டாங்க! தெரியாமதான்... ஆனா கொஞ்சம் கவனமா இருந்திருக்கலாம்'' என்று அலட்டலாகக் கூறிவிட்டு, கீழ்க்கண்ணால் அவளையே நோக்கினாள்!

உடம்பும், மனதும் பதற, ''நான் உடைக்கல ஸார்!'' என்றபோது, அதைக் கேட்க அவன் தயாராக இல்லை.

''செய்யறதையும் செஞ்சிட்டு, பொய்யா சொல்றே நீ... சீ அம்மா...'' என்று இரைந்தான் அவன்.

அவள் குழப்பத்துடனும் இயலாமையுடனும் நிமிர்ந்த போது, லேகா வெற்றிப் புன்னகையுடன் நிற்பது, ஓரக் கண்ணில் பட்டது.

இவள் வேண்டுமென்றே செய்திருக்கிறாள்.

இவளுக்கு நான் என்ன தீங்கு செய்தேன்? ஏன் என்மேல் இத்தனை வன்மம் இவளுக்கு... என்ற கேள்வி, வண்டாய், மனதைக் குடைந்தது.

சத்தம் கேட்டு வந்த அபிராமி அம்மாள், எல்லாவற்றையும் கவனித்துவிட்டு, ''என்ன நடந்தது மித்ரா?'' பதட்டத்துடன் கேட்டார்.

சுரேந்திரன் சீற்றத்துடன், ''உம்! இப்பக் கேளுங்க... நான்தான் சொன்னேனே, ரொம்ப இடம் கொடுக்கறீங்கன்னு! லேகா! நீ போய் ஆபீஸ் ரூமிலே இரு. இதைச் சுத்தம் செஞ்ச உடனே சாப்பிடலாம்'' கோபத்துடன் இரைந்தான்.

லேகா உடனே கொஞ்சும் குரலில், ''இருக்கட்டும் பாஸ்! நான் வீட்லே போய் சாப்பிட்டுக்கிறேன். நீங்க ஏன் பாவம் கோபப்படுறீங்க... நான் எப்படி வேணும்னாலும் அட்ஜஸ்ட் பண்ணிப்பேன். நான் கிளம்பறேன் ஸார்! வரேன் மேடம்!'' அபிராமியிடம் கூறிவிட்டு, மிடுக்காக நடந்து வெளியே சென்றாள்.

சங்கமித்ராவின் மனம் பதைத்தது.

எப்படிக் கொஞ்சம் கூட பயமில்லாமல் பொய் சொல்லுகிறாள். கண்ணோரம் நீர் கசித்து, கீழே வழிந்து விடுவேன் என்று பயமுறுத்தியது!

பயத்துடன் நிமிர்ந்து பார்த்த மித்ராவின் அருகில் வந்து, அணைத்துக் கொண்டார் அபிராமி.

''நீ பயப்படாதேம்மா! சுரேனுக்கு ரொம்பக் கோபம் வந்தா இப்படித்தான்... கண்மண் தெரியாது. தவறுவது சகஜம்தானே? ஆனா, என்ன... ரொம்ப விலை உயர்ந்தது! ரொம்ப வருஷமா குடும்பத்தில் பாதுகாத்துட்டு இருக்கிற ஒரு பொருள்... எனக்கே கஷ்டமாத்தான் இருக்கு... அதான் அவன் அவ்வளவு கோபப்பட்டான்'' என்று கூறும்போது, அவரும் இதை, தான் உடைத்ததாக எண்ணுகிறாரே என்று மித்ராவின் மனம் கலங்கியது.

மித்ரா, உண்மையைக் கூறிவிடலாம் என்று எண்ணி நிமிர்ந்தபோது, வாசலருகே நின்று இருவரையும் பார்த்துக் கொண்டிருந்தான் சுரேன்.

அவளைப் பார்த்த பார்வை, அக்னிப் பந்தாய் உள்ளே இறங்கி உயிர் வரை பரவியது.

மெதுவாகக் குனிந்து, எல்லாவற்றையும் சுத்தம் செய்துவிட்டு, தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டபோது, அவன் கோபம் தன்னை வெகுவாய்ப் பாதித்தது புரிந்தது.

அவன், தன்னைத் தப்பாக எடுத்துக் கொண்டு விட்டானே, என்று மனம் பரிதவிப்பில படபடத்தது!

'யார் என்னைத் தப்பாக நினைத்தாலும் பரவாயில்லை... நீ மட்டும் என்னைத் தவறாக எண்ணிவிடாதே' என்று நெஞ்சம் மறுகிய போதுதான், அவளுக்குள், அந்த நிஜம் புரிந்து, உடல் விதிர்த்தது!

ஏன், அவனுக்காகத் தான் இவ்வளவு கவலைப்படுகிறோம் என்ற வினாவுக்குக் கிடைத்த விடை, விசுவரூபம் எடுத்து மனதிற்குள் சோர்வையும் பயத்தையும் விதைத்தன.

'ஒரு பெண்ணின் மனதில் காதல் புகுந்துவிட்டால், மற்ற எல்லா விஷயங்களுமே முக்கியத்துவம் இழந்து விடுகின்றன.' எப்போதோ படித்த ஒரு பொன்மொழி அப்போது ஞாபகம் வந்தது.

## 7

**த**ன் மனதுக்குள்ளே நடந்தது என்னவென்று உளம் பிரித்துப் பார்த்தபோது, மனதில் கோடைகாலக் காற்றாய் ஒரு வித வெப்பம் பரவியது.

அவள் நெஞ்சத்தைக் கூராகத் துளைத்துச் சென்றது - அவனுடைய கர்வமும் கோபமும்!

ஆனால் அவனைத் தன் மனதுக்குள் செலுத்தி, தனக்குள் விதைத்து விட்ட இனிய செய்தியை, இதயம் மெல்ல கூறியது.

அவள் கன்னங்கள், கண்ணீரில் நனைந்தன.

எதிர்காலமே இல்லாத இந்தக் காதல், ஏன் வந்தது என்று அவளுக்கே புரியவில்லை.

ஆனால் காதல் என்பது, வெறும் வார்த்தையல்ல... தன் வாழ்க்கை என்பது மட்டும் புரிந்தது.

எப்படி வாழப் போகிறோம் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை. விடை தெரியாத புதிராய், மனம் சோகச் சுமையில் அழுந்தியது.

தான் சாப்பிட்டுவிட்டு, அவளைச் சாப்பிட அழைத்துச் செல்ல வந்த அபிராமி, அவளின் சிவந்த முகத்தைக் கண்டு விட்டார்.

காரணத்தைத் தவறாக யூகித்து, அவளை 'வருத்தப்பட வேண்டாம்' என்று ஆறுதல் படுத்தினார்.

அன்று முழுவதும், தன்னைச் சுற்றி ஒரு துன்பச் சிறை கட்டி, அதற்குள்ளேயே வாழ்ந்தாள் சங்கமித்ரா.



சாப்பிடவில்லை, தூங்கவில்லை... எதற்குமே மனம் ஒத்துழைக்க மறுத்தது!

தன் இதயத்தில் ரம்யமாய் மலர்ந்த அந்தக் காதல் எனும் மலரை தனக்குள்ளேயே பத்திரப்படுத்துவதா, அல்லது பறித்து எடுத்து, முளையிலேயே கிள்ளி விடுவதா என்று புரியாமல் தவித்தாள் அவள்.

விதிவசமாய் இது ஒருதலைக் காதலாக, தன் மனதினுள்ளே மட்டுமே மலர்ந்திருப்பதும், நிதர்சனமாய்த் தெரிய, மனம் இருதலைக் கொள்ளி எறும்பாய் அலை பாய்ந்தது.

நிழலின் பிம்பமாய், தன்னுள் தெரிந்த காதலைத் தனக்குள்ளேயே, மறைத்து வைக்க முடிவு செய்தாள்.

மறு நாளிலிருந்து அவன் இருக்கும் திசையையும், அப்படியே எதிர்ப்பட்டாலும், அவன் முகத்தை நோக்குவதையும் அடியோடு தவிர்த்தாள்.

அவனும் ஒரு வித இறுக்கத்துடன் ஒதுங்கிக் கொண்டான்.

ஆனால், அந்த இறுக்கம்தான் அவள் உள்ளத்தைக் கசக்கிப் பிழிந்தது.

காலம் தன் இயல்புடன் கடந்து செல்ல,

ஆசிரமத்திலிருந்து, அவள் போட்ட கடிதத்திற்குப் பதில் வந்திருந்தது. அது மட்டுமே, அவளுக்கு ஆறுதலாய்!

அந்த மாத இறுதியில் ஒரு நாள், லேகா தன் தாயுடன் வீட்டுக்கு வந்திருந்தாள்.

இருவரும் அபிராமி அம்மாவுடன் பேசிக் கொண்டு இருக்க, சுரேன் வெளியே சென்றிருந்தான்.

லேகாவுடைய தாயும் மிதமிஞ்சிய ஒப்பனையுடனும் அலட்டல் தன்மையுடனும் இருந்தாள்.

மித்ராவைக் கண்டதும், ''ஓ! இதுதான் நீ சொன்ன அந்த வேலைக்காரப் பெண்ணா, லேகா? இதுகளுக்கெல்லாம் ஆண்டிக் பொருட்களோட அருமை எங்கே தெரியும்? சோத்துக்கே லாட்டரி அடிக்கிற கும்பல்..! எம்மா! பாத்து வேலை செய்யறதில்லை?'' என்று கூறியபடியே, உள்ளே வந்து கொண்டிருக்கும் சுரேனை, ஓரக்கண்ணால் கவனித்தாள்.

முகத்தில் சிறநத்துடன் உள்ளே வந்த சுரேன், அவர்களை வரவேற்கும் விதமாக, லேசாகச் சிரித்தான்.

''ஹலோ!'' என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குள் சென்று விட்டான்.

லேகாவின் முகம் ஏனோ உடனே தொங்கிப் போனது.

அதற்குள் அபிராமி அம்மாள், ''மித்ரா வேலைக்காரப் பெண்ணில்லை... என்னோட 'கம்பேனியன்'... ரொம்ப நல்லவ! தவறுவது எல்லாருக்கும் பொதுவா சகஜம்தானே?'' என்று சொல்லிவிட்டு அவளை நோக்கி, இதமாகப் புன்னகைத்தார்.

மித்ரா, அவர்களுக்கு டிபன், காபி கொடுத்துவிட்டுத் தன் அறைக்குள் சென்றவள், மனதில் ஒருவித வேதனையுடன் உள்ளேயே இருந்தாள்.

அவர்கள் கிளம்பும்போது, அதுவும் அபிராமி அம்மாவே அழைத்ததால், வெளியே வந்தாள்.

லேகா, அபிராமியிடம் ''ஹால் அலங்காரம் எல்லாம் யார் செஞ்சது ஆண்ட்டி?'' என்று கேட்டுக் கொண்டிருந்தாள்.

அபிராமி அம்மாள் பெருமையாக, ''எல்லாம் மித்ராவோட கை வண்ணந்தான்'' என்றவுடன், லேகாவின் முகத்தில் உடனே ஒரு கருமை பாவியது.

''அதான் இவ்வளவு சீப் டேஸ்டா இருக்கேன்னு கேட்டேன். என் பாஸ்! நம்ம ஆபீஸ் இண்டீரியர் டெக்கரேட்டரையே இதுக்கும் அப்பாயிண்ட் பண்ணி இருக்கலாமே?'' குத்தலாகக் கேட்டாள்.

சுரேன் அவளிடம், ''இதுவே போதும்... நல்லாத்தான் இருக்கு. நீ ஆபீஸ் வேலையோட நிறுத்திக்க லேகா... வீட்டு விஷயத்தை எல்லாம் நான் பாத்துப்பேன்'' என்று கிண்டலாகவும், கோபமாகவும் பதில் கொடுத்தான்.

மித்ராவுக்கு அடக்கமுடியாமல் சிரிப்பு வந்தது!

ஆனால், தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டாலும், அவளை நிமிர்ந்து பார்த்த லேகாவுக்கு, மனம் தீயாய்க் கொதித்தது.

மித்ராவின் விழிகளில் தெரிந்த பளபளப்பு, அவளது மன நிலையைக் கண்ணாடி போல் தெரிவித்தது.

இவ்வளவு அழகாக, சிற்பம் போல் ஒரு பெண், சுரேனின் வீட்டில், அதுவும் அவன் அருகிலேயே இருப்பது, தன் எண்ணங்களுக்கும், எதிர்காலத்திற்கும் ஆபத்து என்பது புரிந்தது லேகாவுக்கு..!

அதனாலேயே, அவள் மித்ராவைப் பற்றித் தவறான அபிப்ராயத்தை அவனிடம் ஏற்படுத்திக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு, இன்று அதுவும் முடியாமல் போகவே மனம் கொதித்தது.

அவனை எதிர்க்கவும் முடியாமல், கோபத்தை வெளிக்காட்டவும் வழி இல்லாமல், கஷ்டப்பட்டு வரவழைத்த புன்னகையோடு, தாயுடன் கிளம்பிச் சென்றாள்.

அவள் சென்றவுடனே, பெரும் புயலடித்து ஓய்ந்தது போல் இருந்தது மித்ராவுக்கு...!

பேசாமல் தன் வேலைகளைக் கவனித்தபோதும், ஏனோ மனம் உற்சாகமாய் துள்ளியது.

சுரேன் தனக்காகப் பேசாவிட்டாலும், தான் செய்த வீட்டு அலங்காரத்தை, நன்றாக இருக்கிறதென்று அவன் ஒத்துக் கொண்டதும், அவளுக்குத் தரையில் கால் பதியாமல் நெஞ்சம் சிறகு கட்டிப் பறந்தது.

சுரேனைப் பற்றிய எண்ணங்கள் உள்ளத்தில் நிறைந்து, உலகமே தனக்குச் சொந்தமானது போல், மனம் பரபரத்தது.

**ம**றுநாள் மாலை, அவள் தோட்டத்தில் பூப்பறித்துக்கொண்டு இருந்தபோது, யாரோ ஒரு வயதானவர் வந்து வாசலில் தயங்கி நிற்பதைக் கண்டாள்.

வாசலின் அருகே சென்று ''வாங்க! யார் வேணும் உங்களுக்கு?'' என்று கேட்டாள்.

''நான்... அபிராமி... இருந்தாங்கன்னா அவங்களைப் பாக்கணும்! நீ யாரும்மா? அவங்களுக்கு உறவா?'' என்றார் சோர்வுடன்.

''இல்லீங்க! அவங்களுக்குத் துணையா இருக்கேன். ஆசிரமத்தில் இருந்து



வந்து இங்க வேலை பாக்குறேன். என் பேர் சங்கமித்ரா. உள்ளே வாங்க! அம்மாகிட்ட சொல்றேன்'' என்றபோது ஒரு கணம் வியப்புடனும் யோசனையுடனும் அவளையே நோக்கியவர், தயங்கியபடி உள்ளே வந்தார்.

''உட்காருங்க. இதோ வந்திடுறேன், அம்மாவை அழைச்சிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

அபிராமி அம்மாவிடம் சொல்லி அவரை அழைத்துக் கொண்டு ஹாலுக்கு வந்தபோது, அவர் உட்காராமல், நின்று கொண்டே இருந்தார்.

''இவர் உங்களைப் பாக்க வந்திருக்காரும்மா... நான் போய் காபி எடுத்திட்டு வந்துடுறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பினாள்.

அவரைப் பார்த்ததுமே அபிராமி அம்மா கண்கலங்க, வந்தவரும் அழுவதை வியப்புடன் பார்த்த மித்ராவுக்கோ, ஒன்றுமே புரியவில்லை!

அபிராமி, சோபாவை ஆதாரமாகப் பிடித்துக்கொண்டு ''நீங்களா?'' என்று கேட்டுவிட்டு, அப்படியே ஓய்ந்து போய் அமர்ந்து விட்டார்.

ஒன்றும் விளங்காமல், அவர் அருகில் வந்த மித்ரா, ''யாரம்மா இவங்க?'' என்றாள். ஏனோ அவர் வருத்தப்பட்டால் தாங்கமுடியாமல் மனம் குழுங்கியது.

அவர் குறுக்கிட்டு ''நான் சொல்றேம்மா... சின்ன வயசுல, குழந்தையோட இவங்களைத் தனியாகத் தவிக்க விட்டுட்டு, ஓடிப்போன பாவிம்மா நான். இன்னிக்கு, என் சொந்தமெல்லாம் என்னை விட்டுப் போனப்புறம்தான், அபிராமி தனியா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாங்கிற உண்மையே எனக்கு உரைச்சது'' என்று நிறுத்திவிட்டு, அபிராமி அம்மாவையே பார்த்தபடி தொடர்ந்தார்.

''என் கிட்ட வேலை பார்த்த பெண்ணோட, நான் கோவாவுக்குப் போய் கல்யாணம் முடிச்சு, குழந்தை பிறந்து, நாங்க நல்லாத்தான் இருந்தோம். ரெண்டு மாசம் முன்னாடி ஒரு விபத்தில், என் இரண்டாவது மனைவியும் மகனும் இறந்து போயிட்டாங்க. அப்புறம் தான் எனக்கு உறவுகளோட அருமையும், பிரிவோட துயரமும் என்னங்கிறதே புரிஞ்சது...

எவ்வளவு பெரிய தப்புப் பண்ணிட்டு, அதுவும் என்னை நம்பி வந்த பொண்ணை ஏமாத்திட்டு... எவ்வளவு பெரிய துரோகம் பண்ணி இருக்கேன்னு தெரிஞ்சது.

இப்பவும் என்னை மன்னிச்சு ஏத்துக்கன்னு கேட்க, நான் இங்கே வரலே. உனக்குச் செஞ்ச துரோகத்துக்கு, எனக்குக் கடவுள் சரியானபடி தண்டனை கொடுத்திட்டார்னு சொல்லிட்டு, முடிஞ்சா என் துரோகத்தை மன்னிச்சி மறந்துடுன்னு கேக்கலாம்னு தான் வந்தேன்'' என்றார் – கலங்கிய கண்களுடன் தழுதழுத்த குரலில்...!

சிறிது நேரம் அமைதியாக இருந்த அபிராமி அம்மாள் நிமிர்ந்தார்.

''என்னால உங்களை மன்னிக்கவே முடியாது. நீங்க என்ன சமாதானம் சொன்னாலும் அதை ஏத்துக்கற மன நிலையில் இப்ப நான் இல்லை... வெளியே போங்க'' என்றார் உறுதியாக!

''நீ என்னை மன்னிச்சாப் போதும்! நான் போயிடறேன் அபிராமி! நான் போன மாசமே முதியோர் இல்லத்துல போய்ச் சேர்ந்துட்டேன்.''

கண்கலங்கக் கூறியபடி அவர் அசையாமல் நிற்கவே, அபிராமி அம்மா

வேகமாகத் தன் அறைக்குள் சென்று விட்டார்.

சுரேனின் அப்பா தியாகராஜனை உட்கார வைத்த மித்ரா, அவரை அங்கேயே இருக்கச் சொல்லிவிட்டு, அபிராமியின் பின்னாலேயே அவரின் அறைக்குள் சென்றாள்.

அங்கு இதயமே வெடித்துவிடும்போல் அழுபவரைப் பார்த்தபோது, மனம் நொந்து போனது மித்ராவுக்கு...!

அமைதியாகச் சிறிது நேரம், அவர் அருகில் அமர்ந்து இருந்த மித்ரா, அவர் கையை ஆதரவுடன் பிடித்துக் கொண்டு பேச ஆரம்பித்தாள். அப்போதுதான் அந்த வாசலில் சுரேன் வந்து நின்றான்.

மித்ரா அவரிடம், ''அம்மா! உங்ககிட்ட நான் கொஞ்சம் பேசலாமா..? உங்க சொந்த விஷயத்தில் நான் தலையிடறேன்னு, தயவு செஞ்சு தப்பா நினைக்காதீங்க. உங்க நிலையில் நான் இருந்திருந்தாக் கூட, அவரை மன்னிக்கிறது கஷ்டம்தான்...

''கைக்குழந்தையோட உங்களை ஏமாத்திட்டுத் தனியா விட்டுட்டு ஓடிப்போன ஒருத்தரை மனசு மன்னிக்காதுதான்! ஆனா, மன்னிச்சிட்டேன்னு நீங்க சொலற ஒரு வார்த்தையால, இப்பத் திருந்தி வந்திருக்கிற அவர் மனசு சந்தோஷப்படுமனா, நீங்க ஏம்மா அதைச் செய்யக் கூடாது? அந்த சந்தோஷத்தை அவருக்குத் தரக்கூடாதுன்னு நீங்க நினைச்சா, அப்புறம் அவரோட செயலுக்கும், இப்ப நீங்க செய்யிற செயலுக்கும், வித்தியாசமே இல்லாமப் போயிடுமே...!

''எனக்குத் தெரியும்! நீங்க ரொம்ப நல்லவங்க... யாரோ ஒரு அநாதை நான்! எனக்கே இவ்வளவு உதவி செஞ்சிருக்கீங்க! உங்களாலே, மத்தவங்களை வெறுக்கவோ, அழிஞ்சு போகணும்னு சாபம் கொடுக்கவோ முடியாதுன்னு, எனக்கு நல்லாத் தெரியும். அப்படி இருக்கறப்ப, ஏம்மா நீங்க அவரை மன்னிக்கக் கூடாது..?

''உயிரோடு இருக்கிற பாம்பை அடிக்கிறது புத்திசாலித்தனம்... ஆனா, செத்த பாம்பை அடிக்கிறது கோழைத்தனம்னு நான் நினைக்கிறேன்.

''ஆசிரமத்துல 'அன்னை' சொல்லுவாங்க, ''உலகத்திலேயே பெரிய சந்தோஷம் மத்தவங்களைச் சந்தோஷப்படுத்தறதுதான்''னு! அதே மாதிரி, நம்ம கண்ணில வர்ற கண்ணீர் கூட, நமக்காக இல்லாம மத்தவங்களுக்காக வரும்போது, அது புனிதமாகுதுன்னு சொல்லுவாங்க!

''ஸாரிம்மா! நான் ரொம்ப அதிகப்பிரசங்கித்தனமாப் பேசறேன்னு நினைக்கிறேன். என்னை மன்னிச்சிடுங்க! ஆனா, இப்பவும் சொல்றேன். வாழ்க்கையின் கடைசி நேரத்தில ஒரு மனசுல நிம்மதியை ஏற்படுத்தற வாய்ப்பை, இப்பக் கடவுள் உங்களுக்குக் கொடுத்து இருக்கார்... நீங்கதான் முடிவு பண்ணனும்!'' என்று கூறி முடித்துவிட்டு, அவரின் பதிலுக்காகக் காத்திருந்தாள்.

அறை வாசலில் நின்று, அவள் பேசிய அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சுரேனுக்குள் கோபமும், பிரமிப்பும், தவிப்பும் ஒன்று சேர எழுவதாய்!

சிறிது நேரம் கழித்து, மெல்ல எழுந்த அபிராமி அம்மா, கண்களைத்



துடைத்துக் கொண்டு நிமிர்ந்தார்.

மித்ராவைப் பார்த்து, ''சரி! நான் அவர்கிட்ட பேசறேன்'' என்று கூறிவிட்டுத் திரும்பிய போதுதான், அங்கு சுரேன் கண்கள் சிவக்க நிற்பதைக் கண்டார்.

ஒருவிதத் தவிப்புடன், அவனிடம் வேகமாகச் சென்ற போது, அவன் முகத்தில் சோகம் கலந்த சிறு புன்னகை ஒன்று தோன்றி மறைந்தது.

அவன் கன்னத்தை ஆதரவாக வருடியவர், ஒரு பெருமூச்சுடன் மெதுவாக வெளியே சென்றார்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மித்ராவுக்கு, மனதில் ஒரு குளிர் பிறந்தது. புதிதாக ஒரு பயம் துளிர்விட்டது.

காரணமில்லாமலே தன் மீது தவறு கண்டு பிடிப்பவன், இன்று அவனுடைய அப்பாவுக்கு ஆதரவாகப் பேசியதற்கு, என்ன சொல்லப் போகின்றானோ என்ற படபடப்புடனும், பயத்துடன் மௌனமாக நின்றிருந்தாள்.

மெதுவாக நடந்து, அவள் அருகே வந்த சுரேன், அவளைக் குனிந்து பார்த்துவிட்டு, உணர்ச்சிகள் நிறைந்த குரலில் ''தேங்க்ஸ்'' என்றான்.

## 8

மித்ராவின் நெஞ்சம் முழுவதும் லட்சம் மின்னல்கள் மின்ன, என்ன சொல்வதென்று புரியாமல் அவனைப் பார்த்து விழித்தாள்.

தன் கண்களில் மட்டுமே வெளிப்பட்ட சோகத்தோடு அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டுக் கடந்து சென்று, அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தான் சுரேன்.

அவனுடைய அம்மாவும் அப்பாவும் தனித்துப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுத்துவிட்டு, ஏதோ யோசனையுடன் இரு புருவங்கள் நெரியக் கண் மூடி அமர்ந்திருக்கும் அவனைப் பார்த்தபோது, இவன் சோகம் துடைக்க வேண்டும் என்ற ஆவல் வந்தது அவளுக்கு...!

தனக்கென்று இதுவரை இல்லாத அத்தனை உறவும் ஒன்றாகச் சேர்ந்து உருவெடுத்து, இங்கு அமர்ந்திருப்பது போல் தோன்றியது.

ஆனால் அவன் மௌனம்தான் அவள் உயிரை இம்சிப்பதாய்!

எங்கே செல்வது என்று புரியாமல், அங்கேயே சுவரில் சாய்ந்து, நின்று கொண்ட மித்ராவின் கண்கள், அவன் உருவை ஆசையுடன் அளவெடுத்தன.

நிமிடங்களோ... யுகங்களோ... கழிந்து போனபின், அபிராமி அம்மா மெதுவாக உள்ளே வந்து சுரேனை அழைத்தார்.

''உன் அப்பா, உன் கிட்ட ஏதோ பேசணுமாம்'' என்ற போது, அவன் முகத்தில் மெலிதாகப் படர்ந்த ஏக்கமும், ஆர்வமும், தவிப்பும் மித்ராவின் மனதை உடைத்துப் போட்டன.

ஒரு சிறு குழந்தையிடம் தெரிகின்ற, தன்னை யாரும் கவனிக்கவில்லையே என்ற ஏக்கமும், தன்னிடம் அன்பு செலுத்தும் ஒருவரைக் கண்டால், வரும் ஆர்வமும் தவிப்பும் அவன் முகத்தில் பிரதிபலித்ததைக் கண்ட போது, மனம்

பரிதவித்தது மித்ராவுக்கு.

திடீரென்று ஏனோ மூச்சடைப்பது போல்! வெளிக் காற்றைச் சுவாசித்தால் தேவலாம என்று தோன்ற அறையை விட்டு வெளியே வந்து, பின் வழியே தோட்டத்துக்குச் சென்றாள்.

அங்கிருந்த கார்டன் பெஞ்சின் மீது சாய்ந்து, கண்களை மூடிக் கொண்ட சங்கமித்ராவின் நாசியில் எங்கிருந்தோ காற்றில் கலந்து வந்த மண் வாசனை மோத, மழை வரப் போகின்றதென்று தோன்றியது.

மெதுவாய் நிமிர்ந்து ஆழமாக அந்த மணத்தை இழுத்துச் சுவாசித்தபடி ஏகாந்தமாய் அமர்ந்திருந்த வேளையில், யாரோ தன் அருகில், பெஞ்சில் அமர்வது தெரிந்தது.

கண் விழித்துப் பார்த்தால், சுரேன் அந்த பெஞ்சின் மறு கோடியில் அமர்ந்திருந்தான்.

இரு கைகளுக்குள்ளும், தன் முகத்தைத் தாங்கியபடி குனிந்து இருந்தான்.

எளிதில் உணர்ச்சி வசப்படாத மனிதர்கள் கூட, பாசம் என்னும் வேகச் சுழற்சியில் சிக்கும் போது, உடைந்து போவது புரிவதாய்!

அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் வரை, அவள் எதுவுமே பேசவில்லை.

அங்கு நிலவிய அர்த்தமுள்ள மௌனம், ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமமாய்...!

எப்போதும் சுரேனைப் பார்த்தவுடன் மனதில் வரும் படபடப்பும், பிரமிப்பும், சூன்யம் கலந்த தவிப்பும் இன்று வரவில்லை.

ஏனோ, அவனுடைய பிரம்மாண்டம் அன்று அவளைப் பாதிக்கவில்லை.

சிறிது நேரம் கழித்து, அவன் நிமிர்ந்து அவளைப் பார்த்தபோது, முகம் கன்றிச் சிவந்து, கண்கள் சோர்ந்து தெரிந்தான்.

அவளைப் பார்த்து, ''ஏன் என்கிட்ட அந்தச் சைனா பீங்கான் செட்டை, லேகாதான் உடைச்சான்னு, அன்னிக்கு நீ சொல்லலை?'' என்றபோது, திகைத்து விழித்து விட்டு, ''உங்களுக்கு எப்படித் தெரியும், நான் உடைக்கலைன்னு..?'' என்றாள் வியப்புடன்.

''ம்...ம்... இன்னிக்கு லேகாவே, அவங்க அம்மாவோட ஃபோன்ல பேசினதை நான் கேட்டேன். நீ அப்பவே சொல்லி இருக்கலாமே..?'' என்றான் குரலில் சிறிது ஆதங்கத்துடன்...

''சொன்னா, நீங்க நிச்சயம் நம்பி இருக்க மாட்டீங்க... அதோட அன்னிக்கு இருந்த நிலைமையே வேற... எல்லாருமே என்னைத் தப்பா நினைக்கிற மாதிரிதான் லேகா நடந்துகிட்டாங்களே! நான், என்னை, எப்படிப் புரிய வைக்கிறதுன்னு தெரியாம விட்டுட்டேன்.''

அவள் இலகுவாகக் கூறியபோது, அவன் பார்வையில் சிறு மலர்ச்சி தெரிவதாய்!

''நீ அவளை நல்லாப் புரிஞ்சிட்டு இருந்திருக்கே சங்கமித்ரா! நான் தான் உன்னைச் சரியா புரிஞ்சிக்கலை...!'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

இன்றுதான், தன்னை முதன் முதலாக, அவன் பெயர் சொல்லி அழைத்திருக்கிறான் என்று மனம் மகிழ்ச்சியுடன் நினைத்தது.

முகம் கனிந்து, மனம் லேசாகத் திரும்பி அவனைப் பார்த்தபோது, அவனும் அப்போது தன்னையே கவனித்துக் கொண்டிருந்தது புலப்பட்டது.

மனதின் தவிப்பு குழப்பமாகி, அவளை முகம் சிவக்கச் செய்ய, வேகமாக எழுந்தாள்.

''நான் போய் அம்மாவைப் பார்க்கிறேன்'' என்று கோர்வையின்றி முணுமுணுத்துவிட்டு, படபடத்த இதயத்துடன் உள்ளே சென்றாள்.

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்த சுரேனின் இதழ்களில், சிறு புன்னகை அரும்பியது. அப்போது வானம் தண்ணீர் முத்துக்களை, பூமிக்குள் தூறலாய்ச் சிதற விட்டது.

மித்ரா வீட்டினுள் சென்றபோது, அபிராமி அம்மா தன் அறைக் கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே இருக்க, சுரேனுடைய அப்பாவும் போய்விட்டிருந்தார்.

என்ன செய்வது என்று புரியாமல் நின்றவள், தன் அறைக்குள் சென்றாள்.

அவளுக்கு, தனிமை இன்று மிகவும் அவசியமென்று தோன்ற, மனதில் பெரும் சூறாவளியுடன் இயல்பாக இருக்க முடியாதென்பதும் புரிந்தது.

மறுநாளிலிருந்தே, சுரேன் அவளிடம் பழகும் முறையில் பெரும் மாறுதல் தெரிந்தது.

அவளைக் கண்டாலே கடுவன் பூனை போல முகத்தை வைத்துக் கொள்ளும் பாவனை மாறி இருந்தது.

ஆனாலும் அவள் ஒதுங்கியே இருந்தாள். அந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை, மதுரைக்குச் சென்று, ஆசிரமத்தில் இருக்கும் அனைவரையும் பார்த்து விட்டு வருவதற்கு, அபிராமி அம்மாவிடம் முன்பே கேட்டிருந்தாள்.

ஞாயிறன்று விடிகாலையிலேயே எழுந்து தயாராகி வெளியில் வந்தபோது, சுரேனும் எங்கோ வெளியில் செல்பவனைப் போல் உடை அணிந்து, ஹாலில் அமர்ந்து காபியைப் பருகிக் கொண்டிருந்தான்.

அவனிடம் ''குட்மார்னிங்'' என்று மெல்லக் கூறி விட்டுத் திரும்பியபோது, உயர்த்திய புருவங்களுடன் புன்னகைத்து, ''குட் மார்னிங்'' என்றான், அவளையே அளவெடுத்த பார்வையுடன்!

மனதின் படபடப்பை மறைத்து, அவள் உள்ளே சென்றாள்.

அபிராமி அம்மா அவளிடம், ''சுரேன் உன்னைக் கொண்டு போய், ஆசிரமத்தில் விட்டுட்டு, வரும்போது அழைச்சிட்டு வரேன்னு சொன்னான் மித்ரா. அவனும் தயாரா இருக்கான்! நீ அவனோடவே போயிட்டு வந்திட்டா எனக்கும் நிம்மதி'' என்றார்.

அவன் குணம் தெரிந்திருந்ததால், மனம் அனிச்ச மலராய்ச் சுருங்கியது.

''வேண்டாம்மா! அவருக்கு ஏன் கஷ்டம்? நான் பஸ்ஸிலயே போய்க்கறேன்'' என்று மறுத்தாள் மித்ரா.

அப்போது ''ரெடியா?'' என்று கேட்டபடி உள்ளே வந்தான் சுரேன்.

''உங்களுக்கு ஏன் வீணா சிரமம்? நான் பஸ்ஸிலே போயிட்டு வந்துடுவேன். நீங்க கிளம்புங்க.''

''முதல்ல ஒண்ணு தெரிஞ்சுக்க. எனக்கு எந்தக் கஷ்டமும் இல்லை. நான் ஒண்ணும் உன்னைத் தூக்கிட்டுப் போகலை - கஷ்டப்படறதுக்கு! கார்தான் உன்னைச் சுமக்கப் போகுது. அப்புறம்... நான், ஒரு வேலையா மதுரைக்குப் போறேன். திரும்பி வரப்ப உன்னை அழைச்சிட்டு வரப்போறேன். அவ்வளவுதான்! கிளம்பறியா?'' என்றான் குரலில் சிறிது கோபத்துடன்.

அவளால் மறுத்து ஒன்றும் கூற முடியவில்லை.

அபிராமி அம்மாவிடம் சொல்லிக் கொண்டு, அவன் பின்னே அமைதியாக நடந்தாள்.

**கா**ரில் அவன் முன்புறம் அமர்ந்ததும், பின் சீட்டில் ஏறி அமர்ந்து கொண்டவளை, சுரேன் ஓரக்கண்ணால் நோக்கி விட்டு, உதட்டைப் பிதுக்கித் தோளைக் குலுக்கி விட்டு, காரை ஸ்டார்ட் செய்தான்.

விடிகாலை நேரம் அழகாக இருந்தது!

சிலுசிலுவென்றிருந்த காலைப் பொழுதில், குளிர் தென்றல் காது மடல்களை வருடிச் சிலிர்க்க வைக்க, பயணம் செய்வது மிகவும் ரம்யமாக இருந்தது.

கடந்து செல்லும் பசுமையான காட்சிகள், மித்ராவின் மனதை லேசாக்கின.

ஆசிரமத்திற்குச் சென்று எல்லோரையும் பார்க்கப் போகின்றோம் என்ற நினைவே, மனதுக்கு இதமாய் இதழ்களில் புன்னகையைப் படர விட்டது.

தனக்கே உரிய சொந்தங்களைத் தேடிப் போவது போல மனம் பரவசமாய்...!

வெளிப்புறக் காட்சிகளில் பார்வையைப் பதித்திருந்த மித்ரா, அவன் பார்வைகள், தன்னைத் தொடர்ந்து கொண்டே இருந்ததை அறியவில்லை.

ஆனால் மனம் மட்டும், அவனைச் சுற்றியே சுழன்றது.

ஆசிரமத்து வாசலில் காரை நிறுத்தியவன், ''நன்றி'' என்று கூறிவிட்டு, அவள் உள்ளே பத்திரமாகச் செல்வதைப் பார்த்துவிட்டுத்தான் கிளம்பினான்.

மித்ராவுக்கு அன்றையபொழுது, ஆசிரமத்தில் மிகவும் மகிழ்ச்சியுடன் கழிந்தது.

அங்கேயே இருந்துவிட வேண்டும் போலிருந்தது. ஆனால், கடமையும் காதலும் போட்டி போட்டுக் கொண்டு அவளை அழைத்தன!

மாலை ஆறு மணிக்கெல்லாம் சுரேன் அவளை அழைத்துச் செல்ல வந்துவிட்டான்.

எல்லோரும் கையசைத்து விடை கொடுக்க, ஒருவித சோகம் மனதைக் கவ்வ காரில் ஏறி அமர்ந்து கையசைத்தவளுக்கு, கண்கள் பனித்தன.

மனம், பெரிய இரும்புக் குண்டை வைத்து அழுத்தியது போலக் கனத்தது.

முகம் கருங்க அமர்ந்திருந்தவளையே கவனித்துக் கொண்டிருந்த சுரேன் திடீரென்று ''அம்மா உன்னை ரொம்ப புத்திசாலி, தைரியசாலின்னு சொன்னாங்க. நான்கூட அதை உண்மையோன்னு நினைச்சேன்!'' என்றான்.

மனதில் பாரத்தைச் சுமந்தபடி, கண்களை துடைத்து நிமிர்ந்தாள் மித்ரா.

''ஏன்... இப்ப மட்டும் என்னவாம்? நான் அப்படி இல்லைன்னு தெரிஞ்சிடிச்சா?'' என்றாள் அதே குரலில்.

''அப்படி வா வழிக்கு... என் கிட்டேயா பேச மாட்டேன்னு திரும்பிட்டு வ



என்று மனதில தோன்றிய எண்ணத்துடன், ''அதில்லை! அன்னிக்கு அம்மாவுக்கு அவ்வளவு அட்வைஸ் பண்ணினே! எல்லாம் ஊருக்குத்தான் உபதேசம் போலிருக்கு...!'' என்று, இழுத்து நிறுத்தினான்.

''கடவுளே! சத்தமா நீங்க என்ன சொல்ல வரீங்கன்னே எனக்குப்... புரியலே!''

''சரி.. நீயேன் இப்ப அழுதிட்டு வரே! அன்னிக்கு என்னமோ அம்மாவுக்குத் தைரியமா இருக்கணும்கற மாதிரி ரொம்ப 'அட்வைஸ்' பண்ணினியே... அதைச் சொல்றேன்!''

''நான் அம்மாவை தைரியமாப் பிரச்னையை எதிர் நோக்கி உங்கப்பாவை மன்னிச்சிடுங்கன்னுதான்சொன்னேன்... இது வேற! இத்தனைநாள் கூட வளர்ந்து பழகினவங்களை விட்டுட்டு வரதுன்னா, எல்லாருக்குமே அப்படித்தான். ஆனா, இது பெண்களுக்கு மட்டும்தான்'' மித்ரா சலிப்புடன் கூறினாள்.

''ம்... அப்படின்னா, நாங்க எல்லாரும் வேலைக்குக் கூடப் போகாம வீட்டிலேயே இருக்கோம்... வெளியூருக்கெல்லாம் போய் வேலை செய்யறதேயில்லை. நீங்கள்ளாம்தான் பாவம்... அப்படித்தானே?''

கிண்டலாகக் கேட்டுவிட்டு சுரேன் மெதுவாய் முறுவலித்தபோது, இவனால்கூட இப்படி நட்புணர்வோடு இலகுவாகப் பேச முடியுமாவென்று ஒரு கணம் வியந்து போனாள் அவள்.

''என்ன? சத்தத்தையே காணோம்? என் கேள்விக்குப் பதில் இல்லையா உன்கிட்டே?''

அவளுடைய நினைவலைகளில் அவன் குறுக்கிட்டபோது, பேசாமல் இருக்க அவளுக்கும் மனமில்லை.

''நான் உண்மையைச் சொன்னேன். உலகத்திலே எது அதிகமா நடக்குதோ அதைத்தானே சொல்ல முடியும்.''

அதற்குள் அவன் குறுக்கிட்டு, ''எது? ஆடு, மாடு எல்லாம் அதிகமா நடக்குதே... அதப் பத்தியா?'' குறும்புடன் கேட்டான்.

சிரிப்பை அடக்கிக் கொண்டு நிமிர்ந்தவள், அவனுடைய கண்கள் மட்டும் அழகாகச் சிரிப்பதைக் கண்டு, ஒரு கணம் தன்னை மறந்தாள்.

அந்த நிமிடம் இதயப் பறவை அவளுடைய அனுமதியின்றியே அவனைச் சுற்றிப் பறந்து, பிறகு வெட்கத்துடன் கூடு வந்தது.

## 9

**வீ**ட்டிற்குச் சென்றதுமே, ''என்னம்மா... இன்னிக்கு நல்லாப் பொழுது போச்சா?'' அபிராமியிடம் கேட்டாள் அவள்.

அவர், உடனே, ''இல்லை மித்ரா! ரொம்பப் போரடிச்சது. பேசாம நானும் ஆசிரமத்துக்கு வந்து, ''அன்னை'' யைப் பார்த்துட்டு வந்து இருக்கலாமோன்னு நினைச்சேன்'' என்றார் புன்னகையுடன்.

''அடுத்தத் தடவை நாம ரெண்டு பேருமே போலாமாம்மா?''

ஆவலுடன் கேட்ட மித்ராவிடம், 'சரி' என்ற அபிராமி, ''சுரேன் எங்கே

மித்ரா...? நானும் சாப்பிட ஆரம்பிச்சிட்டேன்... அப்பறம் அவள் வந்து தனியா சாப்பிடுவாளே?'' என்றபோது, என்ன சொல்வதென்று புரியவில்லை.

''அவள் வந்தா, நீங்க சாப்பிட்டு முடிச்சிட்டு, அப்புறமா அவருக்குப் பரிமாறலாமே?'' என்று கூறி, இன்னொரு சப்பாத்தியை அவருடைய தட்டில் வைத்தாள் மித்ரா.

''ஏன்? அம்மா சாப்பிட்டுட்டு இருந்தாங்கன்னா, நீ எனக்கு 'ஸர்வ்' பண்ண மாட்டியா?''

கேட்டபடியே, இயல்பான சிரிப்புடன் வந்து அமர்ந்த சுரேனைப் பார்த்து, வியப்புடன் சிரித்தார் அபிராமி.

''என்னாச்சு என் பையனுக்கு? ஜாலியா இருக்கான் போல இருக்கு! மித்ராவைக் கண்டாலே ஆகாது... இன்னிக்கு என்ன நடந்தது?'' என்றார் குறுகுறுப்புடன்.

ஒன்றும் கூறாமல், சிரித்தபடியே சாப்பிட்டு எழுந்து, தன் அறைக்குச் செல்லும் சுரேனைப் பார்த்தபோது, அவள் மனதில் ஆயிரம் கேள்விகள் எழுவதாய்!

இந்த நேசம், தனக்குள் சாசுவதமாகுமா... இல்லை கானல் நீராய் கரைந்து போகுமா என்று மனம் ஊமையாய் உருகியது.

அபிராமி அம்மாவின் தேவைகளைக் கவனித்து விட்டு, அவள் படுக்கச் சென்றபோது அன்றைய நினைவுகள் இதயத்தை ஆக்ரமித்து இனிமையாக்கி, உறக்கம் வரவிடாமல் செய்தன.

சுரேனின் மனதறியாது அதிகமாக ஆசைப்படுவது தவறென்றும், ஒரு வார்த்தை சிரித்துப் பேசி விட்டால் அது காதலென்று நினைப்பது முட்டாள்தனமென்றும்; அவளின் இயல்பான குணம் இடித்துரைத்தது.

அந்த நிமிடமே, தன் காதலை ஆழ்மன நிலவறைக்குள் வைத்து இறுக மூடி இதயத்தைத் தாழிட்டுக் கொண்டாள் மித்ரா.

ஆரம்பத்திலேயே எந்த ஆசைக்கும் இடம் கொடாமல் செய்து விட்டால், பிறகு பெரிய பிரச்னையில் அகப்பட்டு விழிக்க வேண்டியதில்லை என்ற கருத்து உரமாய்ப் பதிய, அன்னைக்கு நல்ல பெயர் வாங்கித்தர வேண்டும் என்ற உறுதியும் மனதில் நிறைவதாய்!

அபிராமி அம்மாவிற்கும், தன் மகனின் திருமணத்தை வைத்து ஆயிரம் கனவுகள் இருக்கும்... அதைக் கலைப்பதற்கு அவளுக்கு விருப்பமில்லை

தனக்கு நல்ல வேலையும், சம்பளமும் அளித்திருப்பவரிடம் அதீதமாய் எதையும் எதிர்பார்க்கவும், மனம் துணியவில்லை.

ஆனாலும் இதயச் சோலைக்குள் புதிதாக அரும்ப ஆரம்பித்திருந்த நேச ஞாபகங்கள் நீங்க மாட்டேன் என்று அடம் பிடித்தன.

**ம**றுநாள் அதிகாலையிலேயே விழிப்பு வந்துவிட, உடனே குளித்து விட்டு வந்தபோது, புள்ளினங்களின் பூபாளத்தில் இனிதாக விழிக்க ஆரம்பித்திருந்தது பூமி!

பொழுது லேசாக விடிய ஆரம்பத்திருந்த அந்த வேளையில், பனியில் குளித்துப் புத்துணர்ச்சியுடன் தெரிந்த மலர்கள் மனதை இதப்படுத்தின.



ஒரு முடிவுடன் அவள் அன்று முழுவதும் சுரேனைத் தவிர்க்கும் விதமாகவே நடந்து கொண்டாள்.

ஒரு வித இறுக்கத்துடன் பாராமுகமாய் அவளிருக்க, அவனும் அதைக் கண்டு ஒதுங்கியே இருந்ததால் உற்சாகத்தைத் தவறவிட்ட மனது தவித்துத் துடித்தது.

மறுநாள் காலையிலிருந்து, சுரேனின் பழைய சுபாவம், அவனுள் தன்னைப் பதித்துக் கொண்டது.

எப்போதும் போல அவளிடம் பாராமுகத்துடனும், மற்றவர்களிடம் சற்றே இறுகிய முகத்துடனும் இருந்தான்.

என்னைப் புரிந்து கொள்ளேன் என்ற தவிப்புடன் கலந்த அவளுடைய பார்வையை, அவன் உணரவே இல்லை.

மேலும் இரு வாரங்கள், இப்படியே செல்ல, காலம் அவள் மனக் காயத்தை ஆற்ற முயன்று தோற்றுப் போனது.

இப்போதெல்லாம் லேகா வீட்டிற்கு வருவதே இல்லை என்று சந்தோஷப்பட்டாலும், தன் நிலை புரிந்தபோது, கண்ணில்லாதவன் இயற்கையை ரசிக்க ஆசைப்படுவது போல நெஞ்சம் தவித்தது.

அன்று மாலை, சமையல்கார அம்மாவுக்குக் காய்ச்சல் வந்து விடவே, மித்ராதான் டிபன் செய்து, காபி போட்டுக் கொண்டு இருந்தாள்.

தனக்கும் தன் நண்பனுக்கும் காபி வேண்டும் என்று கேட்பதற்காக, சமையல் அறைக்கு வந்த சுரேன், அவளை அங்கு எதிர்பார்க்கவில்லை.

அழகாக இடுப்பில் தூக்கிச் செருகிய சேலையோடு உதட்டின் மேல் சன்னமாக அரும்பியிருந்த வியர்வை முத்துக்களுடன், ஒருவித நளினத்தோடு அவள் பஜ்ஜி போடுவதையே, அறை வாசல் கதவில் சாய்ந்து நின்று, தன்னை அறியாமல் ரசித்தபடி, விழிகளில் தாகத்துடன் அவளையே பருகிக் கொண்டிருந்தான்.

யாரோ தன்னையே உற்றுப் பார்ப்பதுபோல ஒரு உணர்வு தோன்றவும், திரும்பிப் பார்த்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

சுரேன் அவளையே கூர்ந்து கவனித்துக் கொண்டு நிற்பதைக் கண்டதும் உள்ளம் படபடவென்று துடித்தது

## 10

**அ**ன்றிரவு அபிராமி அம்மாவின் அறைக்கு வந்தான் சுரேன்.

''என்னம்மா.. தூக்கம் வந்துடிச்சா..? கொஞ்ச நாளா ஒரு விஷயம் மனசல ரொம்ப அலை பாய்ஞ்சுட்டு இருக்கு... அதப்பத்திப் பேசலாம்னு வந்தேன்'' என்றான் பீடிகையுடன்.

''என்ன விஷயம்ப்பா... உன்னோட... அப்பா வந்துட்டுப் போனதைப் பத்தியா?'' தயக்கத்துடன் கேட்டார் அவர்.

''ப்ச்... இல்லம்மா! மித்ராவைப் பத்தி நீங்க என்ன நினைக்கறீங்க!'' என்றான் மெதுவாக.

''ஏன்? ரொம்ப நல்ல பொண்ணு... பழகறதுக்கு இனிமையானவ! அவ

அனாதைங்கற ஒரு பரிதாபத்துல சொல்லலை... அவ மருமகளாகப் போற இடம் குடுத்து வைச்சிருக்கணும். ஏன் திடீர்னு கேக்கற... என்னாச்சி சுரேன்?'' என்றார்.

''இல்லம்மா... காதல், கல்யாணம் இதுல எல்லாம் ஈடுபாடே இல்லாம நம்பிக்கையத் தொலைச்சி இருந்த எனக்குள்ளே, முதல் முறையா ஒரு சலனம்! எனக்கு மித்ராவை ரொம்பப் புடிச்சிருக்கும்மா!'' என்றான் குரலில் உணர்ச்சிகள் மேலிட.

முகத்தில் ஆச்சர்யமும் சந்தோஷமும் இணைந்து வர பாசத்துடன் அவன் தலையை வருடினார் அபிராமி.

''எனக்கு ரொம்ப சந்தோஷம்பா! எங்கே, நீ அந்த லேகாதான் உங்க மருமகள்னு சொல்லிடுவியோன்னு பயந்துட்டே இருந்தேன்'' என்றார் குறும்பாக.

''அம்மா...! அந்த லேகாவைப் பார்த்ததாலதான், மித்ரா எவ்வளவு நல்லவன்னு புரிஞ்சிக்கிட்டேன். உங்ககிட்ட அவள் பழகினது... அப்பறம், அந்த சைனா செட் உடைஞ்சப்ப லேகாவை மாட்டிவிடாம அவ காட்டின பெருந்தன்மை... நான் வார்த்தைகள்லே எவ்வளவுதான் கோபத்தை வெளிப்படுத்தினாலும், பொறுமையா இருந்தது இதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமா என்ன மாத்திடுச்சி!'' என்றான் முறுவலித்தபடி.

''நான் நாளைக்கே அன்னை கிட்ட இதுபத்தி பேசறேன்'' என்றபடி அவர் உறங்கத் தயாராகவும், தன் அறைக்கு வந்த சுரேனின் மனம் பெரும் நிம்மதியைத் தத்தெடுத்தது.

அம்மா ஒத்துக்கொள்ளாவிட்டால், என்ன செய்வது என்ற சஞ்சலம் மாறி, மனம் லேசாகி இயல்பான உறக்கம் வந்து தழுவி, கனவுகளின் கதவு திறந்து, அவள் நினைவுகள் சுகமாய் உட்புகுந்தன.

**ம**றுநாள் காலையிலேயே, அபிராமி, ஆசிரமத்துக்கு ஃபோன் செய்து பேசினார்.

அன்னையிடம் எல்லா விஷயமும் கூறியபோது, ''எனக்கு ரொம்ப சந்தோஷம், அபிராமி அம்மா! மித்ராவைக் கேட்டுட்டு, அவ மனசையும் அறிஞ்சப்புறம் இது பத்தி முடிவெடுக்கலாம்! அவளை எங்க ஆசிரமத்துக்குக் கொண்டு வந்து ஒப்படைச்ச பெரியவர் கிட்டயும் பேசணும்'' என்றவரின் குரலிலேயே அவரின் மகிழ்ச்சி தெரிந்தது.

மித்ராவிடம் அவர் எதுவுமே கூறவில்லை.

சுரேன் அவளிடம் பேசிய பிறகு, தான் பேசலாம் என்ற நினைப்புடன் மௌனமாக இருந்தார்.

ஏனோ அன்று மதியமே வீட்டுக்கு வந்த சுரேனிடம் ஏதோ ஒரு வேறுபாடு தெரிந்தது.

மிகவும் களைத்துப் போய், கண்கள் சோர்ந்து கவலையுடன் இருந்தான்.

நேரே தன் அறைக்குச் சென்று, குளித்துவிட்டு வந்தவனைப் பார்த்தால், மனம் நொந்திருப்பது போல் பட்டது.

மித்ராவுக்கு, அவன் முகமே, பெரிய வித்தியாசத்தை உணர்த்துவதாய்!



தன் அறைக்குள் வந்த சுரேனைக் கண்ட அபிராமி, ''என்னப்பா... மதியமே வீட்டுக்கு வந்திருக்கே! நான் இன்னும் மித்ராகிட்ட இதுபத்தி பேசலை... இனிமே தொழிற்சாலையில வேலை நடக்காது போலிருக்கு... என்ன? அவளைப் பார்க்காம இருக்க முடியலியா?'' கிண்டலாகக் கேட்டார்.

அவரையே ஒரு நொடி கூர்ந்து நோக்கியவன், ''அதெல்லாம் இல்லம்மா... உங்ககிட்ட முக்கியமான ஒரு விஷயத்தைச் சொல்லத்தான் வந்தேன்'' என்றான் மெதுவாக.

கேள்வியாக நோக்கியவரிடம், ''அம்மா... மதியம்தான் சென்னையில இருந்து ஃபோன் வந்தது... நீங்க தைரியமா இருக்கணும்! அப்பா... இறந்து போயிட்டாராம். ஆசிரமத்துலே அவருக்கு, இறுதி காரியமெல்லாம் கூட முடிஞ்சி போச்சாம்'' என்று கூறிவிட்டு சோர்வுடன் நிறுத்தினான் சுரேன்.

ஒரு கணம் அதிர்ந்து போய், பிறகு மௌனமாகக் கண்ணீர் விட்ட அபிராமி அம்மா, வெகு விரைவிலேயே சமாளித்துக் கொண்டார்.

''ஏம்பா நமக்கு முன்னாடியே தகவல் சொல்லலை? எல்லாம் முடிஞ்ச பிறகு சொல்லியிருக்காங்க?''

குரல் கம்ம அவர் கேட்டபோது, அவனால் தாங்க முடியவில்லை.

''அம்மா..! அவரோட விருப்பம் அதுதானாம்... அவர் சென்னையில ஒரு முதியோர் இல்லத்துல இருந்திருக்காரு... அங்கேயே அவருக்கு எல்லா சடங்கும் பண்ணிட்டாங்க. பதினைஞ்சு நாள் கழிச்சி அவரோட லாயர் நேத்து வந்து உயிலைப் பத்திச் சொன்னப்ப தான் அவங்களுக்குத் தெரிஞ்சிருக்கு!'' என்றான் ஒரு பெருமூச்சுடன்.

கண்கள் கலங்க அமர்ந்திருந்த அபிராமியிடம், ''அவர் சொத்துல ஒரு பகுதி ஆசிரமத்துக்கும், மீதி இருந்ததை இரண்டாப் பிரிச்சி எனக்குப் பாதியும், அவர் பொறுப்பில் ஆசிரமத்துல வளர்ந்த ஒரு பொண்ணுக்குப் பாதியும் எழுதி இருக்காராம்... வக்கீல்தான் எல்லாம் சொல்லிட்டு நான் நேரா வரணும்னு சொன்னார்'' என்றான் சோர்வுடன்.

அப்போது கதவைத் தட்டி உள்ளே வந்த சமையல்காரம்மா, அவர்களுக்கு ஃபோன் வந்திருப்பதாகக் கூறியவுடன் எடுத்தால், ஆசிரமத்திலிருந்து அன்னை பேசினார்.

சிறு குழந்தையாக சங்கமித்ராவைக் கொண்டு வந்து ஆசிரமத்தில சேர்த்த அந்த மனிதர் இறந்து விட்டதாகவும், தன் சொத்துக்களை தன் மகனுக்கும் மித்ராவிற்கும் சரிபாதியாகப் பிரித்து எழுதி இருப்பதாகவும், இன்று மதியம் வக்கீல் எல்லாவற்றையும் ஃபோன் செய்து தெரிவித்ததாகவும் கூறினார் அவர்.

கண்ணீரினிடையே மெலிதான ஆச்சர்யம் மேலிட, அபிராமி அவரிடம் மித்ராவின் ஆசிரம வருகைக்குக் காரணமாக இருந்தவரின் பெயரைக் கேட்டபோது தான் தெரிந்தது - அவர்தான் சுரேனின் அப்பா என்பது!

அன்னையும், நெகிழ்ச்சியுடன் மேலும் பல விஷயங்களைக் கூறினார்.

மித்ராவிற்கு சிறு வயதிலிருந்தே அவர் மாதம் ஒரு தொகையை அனுப்பி வந்ததையும், முதன் முதலாக ஒரு மாதத்துக்கு முன்பு அவளைப் பார்க்க ஆசிரமம் வந்ததாகவும், அவள் வேலை செய்யும் இடத்தைத் தெரிந்து கொண்டு மகிழ்ச்சியுடன் சென்றதாகவும் அவர் கூறினார்.

மித்ராவை அழைத்து ரிஸீவரைக் கொடுத்து விட்டு, ஹால் சோபாவில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருந்தார் அபிராமி.

அன்னையிடம் பேசிய பிறகுதான் மித்ராவுக்கு எல்லாம் புரிந்தது...

பல லட்ச ரூபாய் சொத்துக்கு தன்னை அதிபதியாக்கி விட்டு, தன்னுடன் எதுவும் பேசாமலே மறைந்து போன அந்த மனிதரின் மேல் ஒரு இனம் புரியாப் பாசமும், பரிவும் சுரந்தது.

அதுவும் தன்னை ஆசிரமத்தில் ஒப்படைத்துப் பராமரித்த பெரியவர் சுரேனின் அப்பாதான் என்றறிந்து மகிழ்ச்சியும், அவர் கண் முன்னால் வந்து நின்றும் தன்னால் அவரை அறிந்து கொள்ள முடியவில்லையே என்ற துக்கமும் சேர்ந்து கலவையாய் மனதில் சோகத்தை விதைத்தன.

தலை குளித்துவிட்டு வந்த அபிராமியிடம் வந்த சுரேன், அவர் கையைப் பிடித்து,

''அம்மா... நீங்க அப்பாவுக்காக உங்க பூவையும் பொட்டையும் இழக்கறதில எனக்குச் சம்மதம் இல்லை. ஏன்னா, தாம்பத்யம்கறதுக்கு அர்த்தம் தெரியாமலே வாழ்ந்து முடிச்சிட்டாரு அவரு!'' என்றான் வேதனையுடன்.

ஒரு பெருமூச்சுடன் சம்மதமாகத் தலையசைத்தவரிடம், அன்றிரவே மூன்று பேரும் கிளம்பிச் சென்னைக்குச் செல்ல வேண்டும் என்று சுரேன் கூறியபோது, மித்ராவுக்குத் தான் பெரும் பிரமிப்பு!

இனி, தான் இங்கு வேலை செய்ய முடியாதா என்று மனம் ஏங்கியது.

தாமரை இலையில் ஜனித்த பனித் துளியின் யாத்திரை தொடங்கிய உடனே அவசரமாக முடிவது போல், தன் வாழ்க்கைப் பாதையின் நிலையோ என்றும் மனம் நொந்து போனது.

அன்றிரவே, மூன்று பேரும் கிளம்பிச் சென்னைக்குச் சென்றனர்.

காலையில் துர்காவின் வீட்டிற்குச் சென்றபோது, விஷயமறிந்திருந்ததால் மௌனமாய் வரவேற்ற அனைவரிடமும் பேசிவிட்டு, வக்கீலின் அலுவலகத்துக்குப் போய் அவரைச் சந்தித்தனர்.

அப்போதுதான், சுரேனின் அப்பா தியாகராஜன், தன் உயிலில் ஒரு புதிரை விடுவித்து, கோரிக்கை ஒன்றையும் வைத்திருந்தார்.

அவர்கள் மூவருக்கும், அவர் எழுதியிருந்த கடைசிக் கடிதத்தில்தான் சங்கமித்ராவின் ரிஷி மூலம் தெரிந்தது... அவளைப் பற்றிய உண்மையும் வெளிவந்திருந்தது!

மித்ரா அவருடைய தங்கையின் மகள் என்பதும், அவள் பிறந்ததுமே, பிரசவத்தில் தாய் இறந்து விட்டதால், அவளுடைய தந்தை, கள்ளிப் பாலைக் கொடுத்துக் குழந்தையைக் கொல்ல முயற்சி செய்ய, அந்தச் சமயம் தன் தங்கையின் சாவுக்கு வந்திருந்த தியாகராஜன், தானே அந்தக் குழந்தையை வளர்ப்பதாகக் கூறி, தூக்கி வந்ததையும் எழுதி இருந்தார்.

ஊருக்குத் திரும்பிச் செல்லும்போது, தன் இரண்டாவது மனைவி அந்தக் குழந்தையை வளர்க்கச் சம்மதிக்காததால், மதுரையிலிருந்த ஆசிரமத்திற்கு எடுத்துச் சென்று, பேருந்து நிலையத்தில் கண்டெடுத்தாகக் கூறி, ஒப்படைத்து விட்டுச் சென்றதையும் குற்றவுணர்வுடன் கூறியிருந்தார்.

அதன் பிறகு, இன்று வரை அவளுடைய பராமரிப்புக்கு தான் மாதா மாதம் பணம் அனுப்பியதையும், அவளுடைய அப்பாவும் அவள் சிறு பெண்ணாக இருக்கும்போதே இறந்து விட்டதால், 'கார்டியன்' என்ற முறையில் தன் உயிலில் ஒரு கோரிக்கை வைத்திருப்பதாகவும் எழுதியிருந்தார்.

மித்ராவிற்கு எதையுமே நம்ப முடியவில்லை. தான் அனாதை இல்லை என்ற உணர்வு, பெரும் பலத்தை அளிப்பதாய்!

போன மாதம், குற்றாலத்திற்குச் சென்று விட்டு ஆசிரமத்திற்கு அவர் வந்த போதுதான், சங்கமித்ரா தன் முதல் மனைவியின் வீட்டில் பாதுகாப்பாக இருப்பதை அறிந்து கொண்டதையும், சுரேந்திரனும் சங்கமித்ராவும் திருமணம் செய்து கொண்டால், தான் மிகவும் மகிழ்வேன் என்றும் கடிதத்தில் அவர் எழுதி இருந்ததைப் படித்த போது அவளுக்கு மூச்சடைத்தது.

இருவரும் திருமணம் செய்து கொண்டால், இருவர் பெயரிலும் சொத்துக்கள் பொதுவாகவே இருக்கலாமென்றும், சுரேனுக்குத் திருமணத்தில் விருப்பமில்லை என்றால் எல்லாவற்றையும் சங்கமித்ராவிற்கே அளித்து விடும்படியும் உயிலில் கூறியிருந்தார்.

அந்தக் கடிதத்தை வக்கீல் படித்து முடிக்க, மித்ராவின் மனம் மகிழ்ச்சியில் மலர்ந்து தடதடத்தது.

ஆனாலும், உயிலுக்காகவோ... இல்லை பிறரின் விருப்பத்திற்காகவோ என்றாலும், சுரேனின் முழு சம்மதமும், ஆத்மார்த்தமான விருப்பமுமின்றி இந்தத் திருமணம் தேவையில்லை என்று தோன்ற, வக்கீலிடம் தனியாகப் பேச வேண்டும் என்றாள் மித்ரா.

அவரிடம், ''சார்... எனக்கு எந்தச் சொத்தும் வேண்டாம். எல்லா உரிமையும் லீகலாகவும், நியாயப்படியும் சுரேன் சாருக்குத்தான்! அவருக்குத் தான் அந்தச் சொத்து போய்ச் சேரணும்... அதனால அவர் பெயருக்கே எழுதிடுங்க'' என்றபோது அவர் புன்னகைத்தார்.

''மிஸ்டர் சுரேன்கூட இதேதான் சொன்னார்... தனக்கு சொத்து எதுவும் வேணாம். இந்தக் கமிட்மெண்ட்டை எல்லாம் தான் விரும்பலைன்னார்... எல்லா சொத்தையும் உங்க பேருக்கு மாத்தி எழுதிடச் சொல்லிக் கேட்டார். அப்படி மாத்த முடியாதுன்னு நான்தான் சொன்னேன்.''

அவர் கூறியபோது, ஒரே நொடியில் மனம் உடைந்து, அவளுடைய ஆசைகள் தவிடு பொடியாய்!

அப்படி என்றால் என்ன அர்த்தம்..? இந்தத் திருமணத்தை அவன் விரும்பவில்லை என்றுதானே...? தன்னை ஒரு சுமையாகக் கருதுகிறான் என்பதுதானே! தவறாகப் புரிந்து கொண்ட மாய மனம் உடனே தன்னைச் சுற்றித் தீவாய் ஒரு சுவர் எழுப்பியது... நெஞ்சம் பனிப் பாறையாய் இறுகியது.

இருவரிடமும் சொத்துப் பத்திரங்களை ஒப்படைத்து விட்டு, எல்லாவித நடைமுறைகளையும் சரியாகச் செய்து முடித்தபின் அவர்களிடம் விடை பெற்றவர், சுரேனைத் தனியே அழைத்து, அவனுடைய தந்தையின் கடைசி ஆசையை, முடிந்தால் பூர்த்தி செய்யச் சொன்னார்.

முகத்தில் புன்னகையுடன் ''சரி'' என்றவள், மித்ராவின் நினைவால் தன் மனம் லேசாவதை, முதன் முறையாக இனிமையுடன் உணர்ந்தாள். அந்த நிமிடம் அவனுக்கு ஏதோ, தடை அகன்ற மாதிரி தோன்றியது!

ஆசிரமத்திற்குச் சென்று, உடனே அன்னையிடம் பேச வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் சுரேன்.

மறுநாள், துர்க்காவும், மித்ராவுமாகச் சேர்ந்து 'ஷாப்பிங்' சென்றிருந்தனர்.

சுரேனுக்கு இப்போதெல்லாம் மித்ராவைப் பார்க்க முடிவதில்லை. எப்போதும் துர்காவுடனே இருந்தாள் அவள்.

வெளியே செல்வதும் அவளுடன் தான். என்னவோ, தன்னைப் பார்ப்பதையே அவள் தவிர்க்கிறாளோ என்ற ஒரு வித ஐயம்கூட அவனுக்குள் இருந்தது.

மதியம் இருவரும் வந்தபோது, அழகான 'பிங்கில்' சுடிதார் அணிந்து, மேலும் அழகாக இருந்தவளிடம் ஏதோ ஒரு வித்தியாசம் தெரிந்தது.

துர்கா முன்னால் வந்து, ''அண்ணா! மித்ராகிட்டே ஏதாவது மாற்றம் தெரியுதா? பார்த்துச் சொல்லுங்க'' என்று மித்ராவை அவன் முன் நிறுத்தியபோது, ''ஷ்...! துர்கா ப்ளீஸ்...!'' என்று சங்கடத்துடன் உள்ளே போய் விட்டாள்.

பொங்கிப் பெருகிய வெள்ளத்தில் சிறு சருகொன்று உதிர்ந்து காணாமல் போனது போல், அவளுடைய நேசமும் அவன் வக்கீலிடம் கூறிய வார்த்தையால் மூழ்கிப் போயிருந்தது.

அறைக்குள் செல்பவளையே பார்த்துக் கொண்டு இருந்தவனிடம், ''நாங்க ரெண்டு பேரும் 'ப்யூட்டி பார்லர்' போய்ட்டு வந்தோம்'' என்றாள் துர்கா சிரிப்புடன். அந்த நிமிடம் முன்பை விட மித்ரா இன்னும் அழகாக இருப்பதுபோல் சுரேனுக்கு மனதில் பட்டது.

தன் தங்கை பங்கஜத்துடன் பேசிக் கொண்டு இருந்த அபிராமிக்கும் இது தெய்வச் செயலாகவே பட்டது.

எங்கிருந்தோ வந்த சங்கமித்ரா, தன் நாத்தனார் மகளாகவே இருக்க, அவளைத் தன் மகனுக்கும், தனக்கும் பிடித்துப் போனதிலும், தன் கணவர் எழுதி வைத்த உயிலிலும் இது சம்பந்தமாக எழுதி இருப்பதும், ஒரு வித தெய்வ சங்கல்பமாகவே தோன்றுவதாய்!

ஆனால், வாய் விட்டு வெளியே அவர் எதுவும் கூறவில்லை.

தான் விட்டுச் சென்ற மகளின் நினைவாகவே, அனாதை ஆசிரமங்களுக்குத் தான் நிறையச் செய்தேன் என்று வாக்குமூலமும் அளித்திருந்தது - ஓரள அவரை மன்னிக்கச் செய்தது.

11

மூவரும், அன்றிரவு கிளம்பி குற்றாலத்திற்குச் சென்றனர்.

மறுநாள் அபிராமி அம்மாள், மித்ராவைத் தனியே அழைத்துப் பேசினார்.



''மித்ரா! நான் உன்கிட்டே கொஞ்சம் பேசணும். உண்மையான பதில் சொல்லுவியா?'' என்றார் பூடகமாக.

ஆச்சரியத்துடன் நிமிர்ந்த மித்ரா அவரைப் பார்த்து, ''என்னம்மா! கேளுங்க, சொல்றேன்'' என்றாள். அவர் வெளிப்படையாகவே ''உனக்கும் சுரேனுக்கும் கல்யாணம் முடிக்க ஆசைப்படறேன். சுரேனைப் பிடிச்சிருக்கா மித்ரா? அவனோட அப்பா எழுதின உயிலைப் பத்தி நீ என்ன நினைக்கிறே?'' என்றார்.

மித்ராவின் மனம் காற்றில் ஆடும் பட்டமாய்ப் படபடத்தது.

என்ன வார்த்தைகளைச் சொன்னால் இதற்குப் பொருத்தமாய் இருக்கும் என்று மனம் யோசிக்க ஆரம்பித்தது. தன் வார்த்தைகள் தவறாகி விடக்கூடாதே என்ற பயமும் எழுந்தது.

''அம்மா! அவரோட அப்பா, இப்படி உயில் எழுதி வச்சிருக்காருங்கிற காரணத்துக்காக, அவர் என்னைக் கல்யாணம் செஞ்சுக்க வேணாம்மா. எனக்கு என்னமோ ஆசிரமத்துப் பிள்ளைகளோடவே, மீதி நாளையும் கழிச்சிடலாமனுதான் தோணுது'' என்றாள், தன் கைவிரல்களையே பார்த்தபடி.

''ஏன் மித்ரா! உனக்கு, சுரேனைப் பிடிக்கலையா?'' என்று அவர் கேள்வி எழுப்பிய போது, தவிப்பில் அவளுக்குக் கண்களில் நீர் முத்துக்கள் அரும்பியது.

'பிடிக்கலையா? உடம்பின் ஒவ்வொரு செல்லும் 'சுரேன்! சுரேன்'னு தவிக்கிறதும், ஒவ்வொரு சுவாசமும் அவன் பெயரிலேயேதான் சுவாசிக்கிறதும்...! ஒரு பார்வை பார்த்தா என்ன... ஒரு வார்த்தை சொன்னா என்னன்னு மனம் பரபரக்கறதும் எனக்குத் தானே தெரியும்' என்ற எண்ணம் மௌனச் செய்தியாய் அவள் மனதிற்குள்ளேயே உதிர்ந்தது.

உதடுகள், ''அப்படி எல்லாம் இல்லேம்மா... ஒருத்தருக்கொருத்தர் இயல்பா விரும்பாம, பெரியவங்களோட கட்டாயத்துக்காக நடக்கற கல்யாணத்திலே எனக்கு விருப்பமில்லம்மா. என்னைத் தப்பா நினைக்காதீங்க'' என்றபோது அபிராமி அம்மாள், ''ஒரு நிமிஷம்'' எனக் கூறித் தடுத்தார்.

''நம்ப நாட்டிலே பெரியவங்க முடிவு பண்ணித்தான் முக்கால்வாசிக் கல்யாணம் நடக்குது. அதிலே யாரும் தோத்துப் போனதில்லை. இதுவும் அப்படித்தான். நான் உனக்கு விருப்பம் இருக்குமோன்னு தப்பா நினைச்சுட்டேன் மித்ரா'' என்றார் யோசனையுடன்.

''ப்ளீஸ்மா... இத இப்படியே விட்டுடலாமே?''

கண்களில் கெஞ்சலுடன் கேட்டாலும், அவள் மனம் வேறு பேசியது.

'எனக்கு விருப்பம் இருந்து என்னம்மா? உங்க மகனுக்கு இல்லையே? நான் வந்ததிலிருந்து ஏனோ அவருக்கு என்னைப் பிடிக்கலை. அப்புறம்கூட ஏதோ சில காரணத்துக்காக என்னை உங்களோட உதவியாளரா ஒத்துக்கிட்டார்... அவ்வளவுதான்! அவர்கிட்ட காதலை பிச்சையா யாசிக்க என் மனசு எந்த நாளிலயும் சம்மதிக்காதும்மா!' என்று மனதினுள் எண்ணியபடி ஒரு சுசந்த முறுவலை வெளியிட்டாள் மித்ரா!

அபிராமி அம்மாள், யோசனையுடன் சுரேனிடம் சென்றார். அவனும் அவருக்காகவே தவிப்புடன் காத்திருந்தான்.

அவர் மெதுவாக, ''நாமதான் தப்பா நினைச்சிட்டோம்னு நினைக்கிறேன்

சுரேன். மித்ராவுக்கு அப்படி ஒரு எண்ணம் இருக்கிற மாதிரியே தெரியலை. ஒருத்தருக்கொருத்தர் விருப்பமில்லாம, பெரியவங்களாப் பார்த்துச் செய்யற கல்யாணத்துல இஷ்டம் இல்லேங்கிறாப்பல!

''நான் கூட எவ்வளவோ கனவு கண்டுட்டேன் உங்க ரெண்டு பேரையும் சேர்த்து வைச்சு... கொஞ்ச நாள் போகட்டும் சுரேன்... அப்புறமா முடிவு பண்ணலாம்!'' என்றார் அபிராமி அம்மா வருத்தத்துடன்.

தன் வேதனையை தனக்குள்ளே அடக்கியபடி சுரேன் தோட்டத்திற்கு வந்தான்.

மனம் விண்டு விடும்போல வலித்ததால், வெளிக்காற்றை சுவாசிக்க வந்த மித்ராவும், அங்குதான் இருந்தாள்.

அவனைக் கண்டதும், வேகமாகப் பின்வழியே தன் அறைக்குள் சென்றவளைப் பார்த்தபோது, தன்னைக் கண்டு அவள் ஒதுங்குவது சுரேனுக்குப் புரிந்தது... மனதிற்குள், ஒரு இனம் புரியாத வலி விரவிப் பரவியது.

பொய்கைத் தாமரைக்குள் நுழைந்த வண்டாய் அவள் தன்னுள் நுழைந்திருப்பது புரிந்தது.

கண்களில் நீர் முத்துக்கள் அரும்ப மித்ரா கட்டிலில் அமர்ந்து யோசித்துக் கொண்டிருக்கும்போதுதான், கதவு வேகமாகத் திறக்கப்பட்டது.

கண்களில் கோபத்துடன், இதயத்தைக் குத்திக் கிழிக்கும் பார்வையுடன் சுரேன் நின்றிருந்தான்.

வேகமாக எழுந்து மறுபுறம் திரும்பி கண்களைத் துடைத்துக் கொண்டபோது, அவன் குரல் இடையே குறுக்கிட்டது.

''ஓ! மகா ராணிக்கு இப்ப எங்களையெல்லாம் கண்டாப் பிடிக்கலை போலிருக்கு...! சரி! நீ எதுக்கு இப்ப அழற? மத்தவங்களை அழ வச்சுத் தானே பழக்கம் – உன்னை மாதிரிப் பெண்களுக்கெல்லாம்...!'' என்றான் குத்தலாக.

அவள் பதிலேதும் கூறவில்லை.

வெளியில் இருட்டிக் கொண்டிருந்த தோட்டத்திலேயே பார்வையைப் பதித்திருந்தாள் அவள்.

ஏனோ மலர்ந்திருந்த தன் வாழ்வும் அஸ்தமனம் ஆகிவிட்டது போல், மனம் சோர்ந்தது.

''என்? பணக்காரி ஆயிட்டோம்னு திமிர் வந்துடிச்சா? இத்தனை நாள் இருந்ததெல்லாம், மறந்து போச்சு போலிருக்கு... நான்கூட உன்னை என்னமோன்னு நினைச்சேன்! இப்பத் தானே உன்னோட சுயரூபம் தெரிஞ்சது இறந்து போன அந்த மனுஷர் விருப்பத்துக்காகத் தான் நானும் யோசிச்சேன்.. நல்லவேளை! உன்னைப் பத்தி முன்னாடியே தெரிஞ்சது. தேங்க்ஸ்!'' என்று கூறிவிட்டு அவன் திரும்பவும், ஓடிச் சென்று அவன் முன் நின்று, நீ நினைப்பது தவறு என்று கூற வேண்டும் போல மனம் மறுகியது.

ஆனால் அதற்கு, தன்னையே விலையாகத் தரவேண்டியிருக்கும் என்பதைப் புரிந்து கொண்டவள், அவன் வார்த்தைகளில் அனலில் விழுந்த மெழுகாய் கரைந்தாள்.

அவனுடைய மனம், முள்ளா மலரா என்று இனம் பிரிக்க முடியவில்லை!

ஆனால், சொல்லில் முள்ளை வைத்து அவள் இதயத்தைக் கிழித்தான் சுரேன்



மறுநாள், அபிராமி அம்மாள், சுரேன் அவளை அழைப்பதாகக் கூறினார்.

அவன் அறைக்குச் சென்றபோது, உயில் விஷயமாக முடிவு செய்வதற்கு முன் இருந்த சுரேன், எங்கோ தொலைந்து போயிருப்பதாகவே ஏனோ அவளுக்குத் தோன்றியது.

ஆனால், அவள் மனமும் போர்க்களமாக இருந்தது.

காயங்கள் மட்டும் புறமுதுகு காட்டி ஓடிய அவள் மனதில் தோன்றின. காதல் போரில், இதயம் களவு போனது அங்கே...! உயிர் கரைந்து போனது இங்கே...!

மித்ராவைக் கண்டதும், அவளுக்குச் சேர வேண்டிய சொத்துக்கள் அடங்கிய பத்திரங்களை அவளிடம் கொடுத்தவன், எதையோ எதிர்பார்ப்பவன் போல, அவளையே ஒரு கணம் உற்று நோக்கினான்.

பத்திரங்களை வாங்கிக் கொண்டவளுக்கு, எதுவுமே பேச நா எழவில்லை.

அவனை நிமிர்ந்து பார்த்தாலே, தன் மனம் உடைந்து விடுமோ என்ற பயத்தில், தரையிலேயே பார்வையைப் பதித்திருந்தாள் அவள்.

மனம் காதலில் உருகியது...! வாய் விட்டுச் சொல்லத் துடித்தது.

ஆனால், சொல்ல முடியாமல் தவித்தது! அங்கு வார்த்தைகள் அர்த்தமின்றிப் போயின.

அவளிடமிருந்து எந்த பதிலும் இல்லாமல் போகவே, சிற்றத்துடன் வேகமாக வெளியே சென்று விட்டான் சுரேன்.

அவனைத் தடுக்காதே என்று ஒரு மனமும், தன் உயிர் பிரிந்து செல்வதைப் பொறுக்காமல், உயிர் பிரிந்த வலியைத் தாங்க முடியாமல் தடுக்கச் சொல்லிய இன்னொரு மனமும் சேர்ந்து, இருதலைக் கொள்ளி எறும்பானாள் மித்ரா!

அன்று இரவு, மித்ராவுக்கு அழுகையிலேயே கரைந்தது.

இரவு நேரத்தில், மனிதனின் உடலில் இனிதாய் மலரும் உறக்கம் மட்டும், அன்று விடியும் வரை, அவளுக்குள் மலரவே இல்லை.

மறுநாள் முழுவதும், உடல் அடித்துப் போட்டாற் போல் இருந்தது. எதிலுமே நாட்டமின்றி உள்ளம் சோர்வாக இருந்தது.

அன்று காலையில், வாக்கிங் செல்லும்போது, அபிராமி அம்மாள் தான் பேச்சை மெதுவாக ஆரம்பித்தார்.

''மித்ரா! நான் அன்னை கிட்டப் பேசறேன். உனக்குப் பதிலா வேறு யாரையாவது அனுப்பச் சொலறேன். நீ எப்படியும் உன் பங்குக்கான சொத்துக்களை எல்லாம் பாத்துக்கிறதுக்கு, சென்னைக்குப் போகணுமே! உன் எதிர்காலத்தை யோசிச்சுதான் இதச் சொல்றேன். நீ எப்பப் போகணும்னு சொன்னா, அதுக்கேத்தாப் போல, நான் ஏற்பாடு பண்ணுவேன்'' என்றார் சோகமாக.

மித்ரா திடுக்கிட்டாள்.

''எம்மா! நான் இங்கே வேலை செய்யறது உங்களுக்குப் பிடிக்கலையா? என் என்னைப் போகச் சொல்றீங்க? என்ன சொத்து கிடைச்சாலும், நான் மாற மாட்டேம்மா, அது முதல்லே என்னோட சொத்தே இல்லை. என்னால அதை உரிமை கொண்டாட முடியாது'' என்றாள் சோர்வாக.

அன்று முழுவதும் யோசித்ததில், சுரேஷிடம் இது பற்றி எப்படியும் இன்று பேச வேண்டும் என்று மித்ராவுக்குத் தோன்றியது.

ஒரு முடிவுடன் தன் அறைக்குச் சென்றவள் தன் பெயரிலிருந்த சொத்துப் பத்திரங்களை ஒரு கவரில் தனியே எடுத்து வைத்தாள்.

ஆனால் அவன் முகத்திற்கு நேராக அதைக் கொடுக்கும் தைரியம் வராமல் போகவே, ஆசிரமத்திற்குச் சென்ற பிறகு திலகாவிடம் கொடுத்து பத்திரமாக சுரேஷிடம் சேர்க்கும்படி கூற வேண்டும் என்று உறுதி கொண்டாள்.

## 12

**மி**த்ரா, மறுநாள் காலையிலேயே அபிராமி அம்மாவிடம் வந்தாள்.

''நீங்க சொன்னதை நான் யோசிச்சுப் பார்த்தேம்மா! நான் ஆசிரமத்துக்கே கிளம்பிப் போறதுதான் சரி! என்னை மன்னிச்சிடுங்கம்மா... நான் ஏதாவது தப்புப் பண்ணியிருந்தா... உங்க மனசைப் புண்படுத்தி இருந்தா! நான் போய் திலகாவை அனுப்பறேன். அவ ரொம்ப நல்லவ! உங்களை, என்னைவிட நல்லாப் பார்த்துப்பா'' என்று கூறியபோது, அவளுக்குத் தொண்டை அடைத்தது.

அபிராமியும் அவளைப் பார்த்துப் பிரிய மனமின்றி, ஆனால் அவளுக்கு அமையப் போகும் நல்ல எதிர்காலத்தை மனதில் கொண்டு பேசினார்.

''மித்ரா! நீ சென்னைக்குப் போறதா இருந்தா போயிட்டு வா. இல்லேன்னா, நீ விரும்பற வரைக்கும் இங்கேயே இருக்கலாம்மா! என்னவோ எனக்கு உன்னைப் போகச் சொல்லவே மனசில்லை'' என்றார் வருத்தத்துடன்.

'எனக்கும்தான்! உங்க பையன் மட்டும், நான் உன்னை விரும்பறேன்கிற வார்த்தையைச் சொல்லட்டும். அப்புறம் நான் இந்த வீட்டை விட்டுப் போகவே மாட்டேன்' என்று கண்ணீர் வடித்தது அவளுடைய உள்ளம்.

ஆனால், ஆசிரமத்துக்குக் கிளம்பிச் செல்வதில், மித்ரா உறுதியாக இருந்தாள்.

அடுத்த வாரமே, திலகா இங்கு வருவதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, அந்த ஞாயிறன்று கிளம்பி விட்டாள்.

அவள் கிளம்பும்போது, 'சுரேஷிடம் சொல்லி விட்டு வா' என்று அபிராமி அம்மா கூறியதும், அவனுடைய அலுவலக அறைக் கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள்.

அவன் தன்னுடைய கம்ப்யூட்டரில் ஏதோ வேலையாக இருக்கவும், மெதுவாக முன் வந்து ''சார்'' என்றாள் தயக்கமாக.

கதவு திறந்தவுடனேயே, அவள் வருகையை உணர்ந்தவன், அவள் அருகில் வந்தவுடன், நிமிர்ந்து என்ன என்பதுபோல், கோபமாக அவளையே நோக்கினான்.

''நான்...'' குரல் தடுமாறி இதழ்கள் துடித்தன மித்ராவுக்கு!

''நான் ஆசிரமத்துக்கே திரும்பிப் போயிடலாம்னு நினைக்கிறேன். இன்னிக்கே கிளம்பறேன்'' என்று கூறி நிறுத்தினாள்.



சிறிது நேர அமைதிக்குப் பிறகு ''சொத்தையெல்லாம்...!'' எனும்போதே இடைமறித்தான் சுரேஷ்.

''அதனாலதானே நீ இவ்வளவு ஆட்டம் போடறே. பணம் வந்தவுடனே இரண்டு கண்ணும் தெரியலே. நான் ஆரம்பத்திலேயே நினைச்சேன். அம்மா தகுதியில்லாத ஒருத்தியத்தான், இங்க கொண்டு வந்து இருக்காங்கன்னு...! இடையில ரொம்ப நல்லவளா நடிச்சே! எனக்கு எந்த விளக்கமும் வேணாம். நீ போகலாம்'' என்று கூறிய படி, வாசலை நோக்கிக் கோபமாகக் கை நீட்டினான் சுரேஷ்.

பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்கி விடாதோ என்ற பேராவலுடன் உள்ளம் கலங்கி, கண்களை இறுக மூடித் திறந்த மித்ரா, சோர்வுடன் வெளியேறினாள்.

அபிராமி அம்மாவை நமஸ்கரித்து விட்டுச் செல்லும் போது, வழி முழுவதும் சுரேஷின் நினைவாகவே இருந்தது.

காதலுக்குத்தான் எவ்வளவு சக்தி என்று புரிந்தது. எந்த நிலையிலும், தான் விரும்பாத ஒன்றைக்கூட, போனால் போகிறதென்று ஏற்றுக் கொள்வதும் புரிந்தது.

முன்பு காதல் புரிந்தாலும், அந்தக் காதல் பெற்றுத் தந்த வலி மட்டும் இன்று புரிவதாய்!

ஆசிரமத்துக்குச் சென்றும் அவள் துயர் குறையவில்லை.

காதல் என்பது, சந்தோஷங்கள் இழக்கப்பட்டுப் பெறுகிற வலியோ என்று கூடத் தோன்றியது.

சுரேஷின் நினைவை மட்டும், கனவுகள் அவளுக்குப் பரிசாய் அளித்தன. மனதை ஊனாய் உருக்கியது காதல்!

நாட்கள் விரைய, மித்ராவின் மனமும் உடலும் தேறவே இல்லை. உடல் மெலிந்து விட்டது.

முன்பு இருந்த பொலிவு, அவளிடமிருந்து விடை பெற்றுச் சென்றிருந்தது. திலகா குற்றாலத்திலிருந்து கடிதம் எழுதி இருந்தாள்.

சுரேஷைப் பற்றி எழுதும்போது, அவனைப் பார்க்கவே முடியவில்லை என்று எழுதி இருந்தாள்.

காலையில் சீக்கிரமே எழுந்து சென்று விடுபவன், இரவு நேரம் கழித்தே வருவதாக எழுதி இருந்தாள்.

மித்ராவுக்கு, தன் கவலையில் தான் எடுத்து வந்திருந்த சொத்தின் பத்திரங்களையும், கடிதத்தையும் திலகாவிடம் அனுப்பவே மறந்து போனது நினைவுக்கு வந்தது.

உடனே அனுப்ப வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள்.

அங்கு சுரேஷின் அலுவலகத்தில், அவன் புலிபோல் கோபத்தில் பாய்ந்து, அனைவரையும் குதறிக் கொண்டு இருந்தான்.

மித்ரா சென்றதிலிருந்து அவன் தன் இயல்பில் இல்லை. மனம் ஏனோ நிலை கொள்ளாமல் தவித்தது.

ஒரு பெண்ணுக்காகத் தான் இவ்வளவு போராடுவது, அவனுக்குத்

தன்னையே வெறுக்கச் செய்தது.

அவன், நேரத்துக்குச் சாப்பிடுவதில்லை. தூங்குவதில்லை. தன் மன வேதனையை, பிரிவெனும் பெரும் துயரை மறக்க, அலுவலக வேலைகளில் தன்னை அதிகமாக ஆட்படுத்திக் கொண்டான்.

அதிலேயே, மனம் உழன்றதில் முகம் சோர்ந்து, களைத்துத் தெரிந்தான்.

**கா**லம், தன் பக்கங்களைப் புரட்டியபோதுதான், துர்காவின் திருமணமும் வந்தது.

பத்திரிகை வைத்துவிட்டுச் செல்ல, பெற்றோருடன் வந்த துர்காதான், தன் பெரியம்மாவிடம் மித்ராவைப் பற்றிக் கேட்டாள்.

அபிராமி அம்மாள் எல்லாவற்றையும் விவரித்துக் கூற, அவளுக்கு மித்ராவின் மேல் கோபம் வந்தது.

இதை எப்படியாவது சரி செய்ய வேண்டுமே என்று தோன்றியது.

அன்று தான் மித்ரா அனுப்பிய தபாலும் வந்தது.

அன்று மாலையிலும், நேரம் கழித்தே வீட்டுக்கு வந்த சுரேஷிடம், அந்தக் கவரைக் கொடுத்தார் அபிராமி அம்மா.

அவன் அசுவாரசியமாக அதை மேசையில் போட்டு விட்டுச் செல்வதைக் கவனித்த துர்கா, அவன் அறைக்கே கவரை எடுத்துக் கொண்டு சென்றாள்.

கவருடன் உள்ளே நுழைந்த துர்காவைக் கண்டதும், "என்ன துர்கா! அடுத்த வாரமே கல்யாணம் போல இருக்கு. கங்கிராட்ஸ்! அது ஏதாவது அலுவலகக் கவரா இருக்கும். வச்சிட்டுப் போ" என்றான் சுரேஷ் சோர்வுடன்.

"இல்லேண்ணா! மித்ராகிட்டருந்து வந்திருக்கு. அனுப்புநர் முகவரியிலே அவங்க பேர் போட்டிருக்கு" என்றவுடன், கண்கள் மின்ன அவளிடம் வேகமாக வந்து கவரை வாங்கிக் கொண்டவன், உடனே அதைப் பிரித்தான்.

உள்ளே பத்திரங்களைக் கண்டதும் கோபமாக விசிறி அடித்து எல்லாவற்றையும் படுக்கையில் போட்டு விட்டுக் குளியல் அறைக்குள் சென்று விட்டான் சுரேஷ்.

துர்காவுக்கு ஒன்றும் புரியவில்லை.

மித்ரா, ஏன் இப்படிச் செய்தாள் என்ற கேள்வி அவள் மனதைக் குடைந்தது.

இதில் தான் ஏதாவது செய்தாக வேண்டும் என்று மனதினுள் தீர்மானித்துக் கொண்டாள் துர்கா.

பெற்றோருடன், மறுநாளே துர்காவும் கிளம்பினாள்.

மதுரைக்குச் சென்றதும், மித்ராவையும் பார்த்து நேரே திருமணத்திற்கு அழைத்துச் சென்று விடலாம் என்று தோன்றியது.

ஆசிரமத்துக்குச் சென்று மித்ராவுக்கு பத்திரிகை கொடுத்த போதும், அவர் அம்மா கூடவே அருகில் இருந்ததால், அவளால் ஒன்றும் பேச முடியவில்லை.

தன் வீட்டிலேயே, முன்னதாகவே வந்து தங்க வேண்டுமென்றும் அவளை திருமணத்திற்கு அழைத்து விட்டுக் கூறினார் பங்கஜம்.

துர்கா கட்டாயம் அவளைத் தன் திருமணத்துக்கு வரவேண்டுமென்று அழைத்து விட்டுச் சென்றாள்.



கல்யாணத்துக்குச் சென்று பழக்கமே இல்லாததாலும், தன்னிடம் பட்டுப் புடவையே இல்லை என்பதாலும் கடைக்குச் சென்று, இரண்டு பட்டுப்புடவைகள் எடுத்து வந்தாள், மித்ரா.

அன்று தான் சுரேஷிடமிருந்து குரியரில் எல்லாப் பத்திரங்களும் திரும்பி வந்திருந்தன.

ஒரு மன மாறுதலுக்காவது கல்யாணத்திற்குச் சென்று வர முடிவு செய்திருந்தாலும், உண்மையான காரணம் சுரேஷ் அங்கு வருவான் என்ற எதிர்பார்ப்புத்தானென்று புரிந்தது.

## 13

**அ**ன்னை, அவளைத் தனியே சென்னைக்கு அனுப்ப மறுத்து, கூடவே ஒரு பெண்ணையும் அனுப்பினார்.

துர்கா, தன் வீட்டிலேயே இருவரையும் தங்கச் சொல்லி இருந்ததால், முதல் நாள் காலையே இருவரும் அங்கு சென்று விட்டனர்.

அப்போதுதான் அபிராமி அம்மாவும் அங்கு வந்திருந்தார்.

வீட்டில் கூட்டமாக இருக்கும் என்பதால், சுரேஷ் ஹோட்டலிலேயே தங்கி விட்டான் என்று அவர் கூறினார்.

மித்ராவைப் பார்த்ததும், அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கல்யாணத்துக்கு அவள் வருவாள் என்று அவர் எதிர்பார்க்கவில்லை.

அனைவரும் பேசிக் கொண்டிருக்கும்போது, ஃபோன் மணி ஒலித்தது.

துர்கா மித்ராவைப் பார்த்து, "மித்ரா! அதை எடுத்து, யாருன்னு கேளு" என்றாள் இயல்பாக.

மித்ராவும் ஃபோனை எடுத்து, "ஹலோ" என்று கூறவும், ஒரு கணம் மறுபுறம் எந்த சப்தமும் இல்லை.

மீண்டும் "ஹலோ! யார் பேசறீங்க?" என்று அவள் கேட்டபோது, "நான் சுரேஷ் பேசறேன்!" என்று அவனுடைய ஆண்மை நிறைந்த குரல் ஆழமாகக் கேட்டது.

திடுக்கிட்டு ஒரு கணம் விழித்த மித்ரா, "உங்களுக்குத் தாம்மா ஃபோன்" என்று அருகில் அமர்ந்திருந்த அபிராமி அம்மாவிடம் ரிஸீவரைக் கொடுத்துவிட்டு, வேகமாக எழுந்து வெளியே சென்று, தோட்டத்தில் அமர்ந்து கொண்டாள்.

அவளையே கவனித்துக் கொண்டிருந்த துர்கா, அபிராமி அம்மா சுரேஷிடம் பேசுவதைக் கவனித்துவிட்டு, வெளியே வந்தாள்.

வானில் எங்கோ தன் கலங்கிய விழிகளைப் பதித்தபடி யோசித்துக் கொண்டிருந்த மித்ராவைக் கண்டதும், ஏனோ அவளுக்குப் பாவமாக இருந்தது.

அருகில் வந்து அமர்ந்தவுடன், திரும்பியவளின் கண்களில் வழிந்த நீர், கைகளில் பட்டு தெறித்தது.

"மித்ரா! நான் உன்னோட தனியாகக் கொஞ்சம் பேசணும். என் அறைக்கு வரியா?"

துர்கா அழைத்தபோது, "சரி" என்று அவள் பின்னே சென்றாள் மித்ரா.

தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தியவள், "நான் ஒண்ணு கேப்பேன்.. ஆனா உண்மையை மட்டும்தான் நீ சொல்லணும், சொல்வியா மித்ரா?" என்றாள்.

அவள் தலையாட்டியதும், கட்டிலில் அவளை அமர வைத்துத் தானும் அமர்ந்து கொண்டாள்.

தலை குனிந்தபடி, மடியில் கோர்த்திருந்த விரல்களையே பார்த்துக் கொண்டிருந்த மித்ரா, துர்காவின் அடுத்த கேள்வியில் திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

"நீயும், சுரேன் அண்ணாவை மனசாரக் காதலிக்கிறே தானே?" என்றபோது, அவள் என்ன சொல்வது என்று புரியாமல், "ப்ளீஸ், துர்கா! அதெல்லாம் வேண்டாமே.. நான் இப்பத்தான் கொஞ்சம் நிம்மதியா இருக்கேன். திரும்பவும் ஏன் பழசை எல்லாம் பேசணும்" என்றாள் சோகமாக.

"நீ நிம்மதியா இருக்கலாம். ஆனா அங்க என் அண்ணா நிம்மதியா இல்லையே? அவரோட நிம்மதியைத்தான் நீ எடுத்திட்டு வந்துட்டியே?

அவர் பாவம்... அங்க உன் நினைப்புல கஷ்டப்பட்டுட்டு இருக்காரு. இங்க நீ ஜாலியா இருக்கலாம்னு பார்க்கிறியா?" என்றாள் துர்கா கோபத்துடன்.

மித்ரா ஒன்றும் விளங்காத பாவனையுடன், "என்ன துர்கா சொல்றே? ஜோக்கடிக்கிறியா?" என்றாள் விரக்தியுடன்.

"இல்லை...! உண்மையைச் சொல்றேன்" என்றாள், துர்கா அழுத்தமான குரலில்.

"இல்லை... அவர் என்னை விரும்பலை! எனக்குத் தெரியும் - அவருக்குக் காதல், கல்யாணம் இதெல்லாம் பிடிக்காதுன்னு! அவங்க அப்பா எழுதின உயிலுக்காக, விருப்பமில்லாத இந்தத் திருமணத்துக்கு சரின்னு அவர் சொன்னார். இறந்து போனவங்க வார்த்தைக்கு மதிப்பு கொடுக்கணும்தான்... ஆனா அதுக்காக ஒருத்தர் தன் சுய விருப்பத்தை விட்டுக் கொடுத்து, வாழ்க்கை முழுக்க கஷ்டப்படணும்னு அவசியமில்லை. அதான் சொத்தை அவர் பேருக்கே எழுதிக் கொடுத்துட்டு, நான் ஆசிரமத்துக்கு வந்துட்டேன்" என்றாள்.

"மண்ணாங்கட்டி! அவர் விருப்பம் என்னன்னு உனக்குத் தெரியுமா? மனசு முழுக்க உன்னை வச்சுக்கிட்டு, அதைச் சமக்கவும் முடியாம, மறக்கவும் முடியாம, எங்க அண்ணன் படற வேதனை உனக்கு எங்கே புரியப் போகுது?" என்று கோபமாக முடித்தாள், துர்கா படபடப்புடன்.

மித்ரா தவிப்புடன், "ப்ளீஸ் துர்கா! எனக்கு நீ சொல்ற எதுவுமே புரியலே... நம்பவும் முடியலே!" என்றாள் விழியோரம் புதிதாய்ப் பூத்த அரும்புகளுடன்!

துர்கா மெதுவாகக் கூற ஆரம்பித்தாள். சுரேன் அவளை உயிராய் விரும்பியதையும், அவளின்றித் தவித்துப் போனதையும் கூறினாள்.

"இப்பவாவது புரியுதா..? என் அண்ணா உன்னை உயிலுக்காகவோ, சொத்துக்காகவோ கல்யாணம் பண்ணிக்க நினைக்கலை ... உண்மையான காதல்தான் இதுக்குக் காரணம்னு...?" என்றாள் கோபத்துடன்.

பிறகு "இன்னொண்ணும் தெரிஞ்சுக்க... இந்த உயில் விஷயம் தெரியறதுக்கு முன்னாடியே, உங்க அண்ணை கிட்டே, இது விஷயமா பெரியம்மா பேசி இருக்காங்க. அவங்க உன் விருப்பத்தைத் தெரிஞ்சிகிட்டு முடிவு பண்ணலாம்னு சொன்னாங்களாம். அப்புறம்தான், அவங்கிட்ட இந்த உயில் விஷயத்தைச்



சொல்லி, அதெல்லாம் முடிஞ்சவுடனே இதுபத்திப் பேசலாம்னு பெரியம்மா சொல்லி இருக்காங்க...

எங்க அண்ணன்கிட்ட இல்லாத பணமா நீ வசிருக்கிறது? அதைத் திருப்பி அனுப்பறே? அப்படியே அறையலாம் போல இருக்கு! ஆனா, அண்ணியா வரப் போறவளாச்சேன்னு பாக்கிறேன்" என்றாள் துர்கா, மிகுந்த வருத்தத்துடன்.

அப்போதுதான் மித்ரா தன் தவறை உணர்ந்தாள்.

பழைய நினைவுகளை நெஞ்சம் மயிலிறகாய் வருட, சுரேனின் பார்வைகளும் புன்னகைகளும், இன்று நிஜத்தை உணர்த்த, மித்ராவின் மனம் ஆனந்தமாய்ச் சிறகடித்தது.

இதய அலை வரிசையில் தொடர் ஒளிபரப்பாய் சுரேனின் நினைவுகள் சப்தமிட, அந்த நினைவே கவிதையாய் அவளுள் படர்ந்தது.

மனதிற்குள் சுரேனை ஆழப் பதித்து, இவ்வளவு நாள், தான் புரிந்த மௌனத் தவத்திற்குப் பலன் கிடைத்தாற் போலிருந்தது.

நெஞ்சம் ஆனந்தமாய்க் கும்மி கொட்ட, கண்கள் கண்ணீரை அருவியாய்க் கொட்டியது.

தனக்கும் சுரேனுக்கும் இடையே இருந்த, மதில் சுவர் உடைந்து சிதைந்தது புரிந்தது.

ஆனந்தத்தில் விம்மி அழ ஆரம்பித்தாள் மித்ரா. அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டாள் துர்கா!

"உனக்கு ஒரு சின்ன தண்டனை! இன்னிக்கு மாலையில் தான், நீ அண்ணனைப் பார்க்க முடியும். ஏன்னா, அவருக்கு இன்னிக்கு தொழில் சம்பந்தமா ஒரு 'கான்ஃபரன்ஸ்' இருக்கு. நான் இப்பவே ஃபோன் பண்ணிச் சொன்னாக்கூட, எல்லாத்தையும் விட்டுட்டு ஓடி வந்துடுவாரு தான்!" என்று சொல்லி நிறுத்தினாள் துர்கா.

தவிப்புடன் நிமிர்ந்த மித்ராவைப் பார்த்து, "ஆனா நான் சொல்லப் போறதில்லை. அதனாலே அண்ணன் சாயந்தரமா, நேரே மண்டபத்துக்குத் தான் வருவார். நீ அவரை எப்படிக் காக்க வைச்சே! நான் சொன்ன தண்டனை இதுதான்! இப்ப காத்துட்டிருந்துதான், நீ அவரைப் பார்க்க முடியும்."

"அப்புறம் இன்னொண்ணு! நீதான் அவர்கிட்டேப் பேசணும். எப்படிப் பேசுவியோ எனக்கு அதெல்லாம் தெரியாது. நாங்க யாரும் பேச மாட்டோம்! ஆனா, இன்னிக்கே நீ பேசணும். அதுவும் சமத்தா, தனியா... என்ன?" என்று கூறி, அவள் கன்னத்தைத் தட்டி விட்டு, உள்ளே அழைத்துச் சென்றாள்.

துர்கா, தனக்கென அழகு நிலையத்திலிருந்து மதியம் வந்தவர்களிடம் மித்ராவுக்கும் மருதாணி போடச் சொல்லி ஒப்பனை செய்யச் சொன்னாள்.

வெட்கத்துடன் வேண்டாமென மறுத்தவளிடம், "அப்புறம் அண்ணன் கிட்டச் சொல்லிடுவேன். ஒழுங்கா, நாத்தனார் சொல்றதைக் கேளு.. பாவம், எங்கண்ணா... ஏற்கெனவே நொந்து போய் இருக்காரு. சாயந்தரம் மேக்கப் இல்லாம உன்னைப் பார்த்து, பயந்து திரும்பி ஓடப் போறாரு. அதனாலதான் இந்த ஏற்பாடு எல்லாம் பண்றேன்!" என்றாள் குறும்பாக.

துர்காவின் மூலமாக விஷயம் அறிந்த அபிராமி அம்மாவும், மித்ராவை வாஞ்சையுடன் அணைத்துக் கொண்டு ஆனந்தமாய்ப் பெருமூச்சு விட்டார்.

எல்லோருக்கும் தெரிந்த அவள் மனம், யாருக்குத் தெரிய வேண்டுமோ, அவனுக்கு மட்டும் இன்னும் தெரியவில்லை!

அவனுடைய மனதைப் பற்றித் தெரிந்து விட்டதால், அவள் உணர்வுகள் அவனுக்காக வேள்வி செய்தன.

ஒவ்வொரு முறையும் அழைப்பு மணி, குழலோசையாய் ஒலித்த உடனே திரும்பி வாசலை நோக்கிய அவள் பார்வை, நிராசையுடன் சுவர் பந்தாய் திரும்பி வாடியது.

அவனைக் காணாதது, மனதை வலிக்கச் செய்ய, அந்த வாசல் போலவே, அவள் இதயமும் அவன் பாதச் சுவடு தேடி, ஈரம் உலர்ந்து போய்...!

ஆனால், சுரேன் மட்டும் வரவே இல்லை!

## 14

**மா**லையில், அனைவரும் கிளம்பி திருமண மண்டபத்துக்குச் சென்றனர்.

மித்ரா, துர்காவுடனே தங்கி விட்டாள். பெண் அழைப்புக்கு வரும் காரில் இருவரும் செல்லலாம் என்று கூறி விட்டாள் துர்கா.

மித்ராவுக்குத்தான் தவிப்பாக இருந்தது.

பார்லரிலிருந்து வந்தவர்கள் அவளுக்கும் தலை அலங்காரம் செய்து விட்டிருந்தனர்.

தன்னை எளிமையாக அலங்கரிக்கச் சொன்ன மித்ரா, தலை முடியை 'பிரெஞ்சு நாட்' முறையில் முன்புறம் மட்டும் பின்னி, பின்புறம் தோகையாய் முடியை விரித்து விட்டிருந்தாள்.

தங்க மணிகள் அழகாய் தலையின் முன்புறம் பதிக்கப் பட்டிருந்தன.

அழகிய ரோஜா வண்ணப் பட்டுச் சேலையில், எளிமையான நகைகள் அணிந்து, ஒரு கை தேர்ந்த சிற்பி செதுக்கிய அழகுச் சிலை போல் இருந்தாள் சங்கமித்ரா.

அவள் நிறமும், புடவையின் நிறமும் ஒன்றை ஒன்று போட்டியிட, கன்னங்கள் சுரேனின் வரவை எதிர்பார்த்து இயல்பாகவே சிவந்திருந்தன.

துர்காவும், பதுமைபோல் அழகாகக் கம்பீரமாகக் காட்சி அளித்தாள்.

வீட்டிற்குப் பெண் அழைக்க வந்தவர்களுடன், அவர்களும் இன்னும் சில உறவுப் பெண்களும் மண்டபத்திற்குச் சென்றனர்.

மண்டபத்தின் வாசலில் இறங்கிய உடனே, இருவரின் கண்களும் தங்கள் இணை தேடி அலை பாய்ந்தன.

மித்ராவின் விழிகள், சுரேனை ரகசியமாய்த் தேடின.

வாசலில் யார் யாரோ நின்றிருந்தனர். அவனை மட்டும் காணவில்லை!

உள்ளே சென்றபோது, மண்டபத்துக்கு உள்ளே செல்லும் நுழை வாயிலில்,



பெண்கள், மலர்களுடன் சந்தனம், பன்னீர், கல்கண்டுடனும் காத்திருந்து, மணப்பெண் வந்ததும் அவர்களை வரவேற்றனர்.

மித்ரா அதை ஏற்கும் விதமாய்ப் புன்னகை புரிந்து, நிமிர்ந்தபோது தான், சுரேனை முதன் முதலாய் சந்தித்தாள்.

கோட், சூட் அணிந்து அழகாக ஆண்மை ததும்பிய உருவமாக நின்றான் அங்கு சுரேன்.

சுரேனும், அவளை அங்கு எதிர்பார்க்கவில்லை.

துர்காவின் உத்தரவால், அபிராமி அம்மாவும் அவனிடம் எதுவும் கூறவில்லை.

மண்டப உள் வாயிலில் நின்று, பெண்ணுக்கு அண்ணன் என்ற முறையில் அவன் எல்லோரையும் வரவேற்றுக் கொண்டிருந்தபோதுதான், துர்காவின் அருகில், தங்கத் தாமரை போல, பதுமையென நடந்து வரும் மித்ராவைக் கவனித்தான் அவன்.

ஏனோ அவன் மேனி சிலிர்த்தது... இதயம் ஓடிச்சென்று அவளை நாடி நின்று வேகமாகத் துடித்தது.

அவள், அவனை முதலில் நிமிர்ந்து கூடப் பார்க்கவில்லை... அவனுடைய தவிப்பையும் அறியவில்லை!

அவன் அருகில் வந்தவுடன், நிமிர்ந்தவளின் விழிகள் பிரமிப்புடன் பிரகாசமாகி, சுரேனின் விழிகளில் மோதித்தெறித்தன.

இருவர் பார்வையும் ஒன்றை விட்டு மற்றொன்று விலகவே இல்லை.

பாலைவனத்தில் தண்ணீருக்குத் தவித்த ஒருவன், தண்ணீரைக் கண்டதும் ஆவலுடன் பருகுவதைப் போல, அவன் பார்வை அவளை அள்ளிப் பருகியது.

தன் மனதுக்குள் அற்புதமான கருத்துப் பதிவுகளைப் பதித்தவனை, மித்ராவும் காதலுடன் கண்களால் சிறை செய்தாள்.

பார்வைகள் வேகம் கலந்த தாகத்துடன் ஒன்றை ஒன்று சிறையெடுத்தன.

சுரேனுக்கு, அவளின் நேசப் பார்வை, உண்மைதானா என்றே முதலில் புரியவில்லை.

பிறகு, இந்தப் பார்வை மட்டும் போதாதென்று, மனம் சத்தியாக்கிரகம் செய்தது.

அவள் மனதை எப்படித் தெரிந்து கொள்வது என்ற பெரும் போராட்டம் அவனுக்குள்...!

அவளை, அப்படியே தூக்கிக் கொண்டு எங்காவது சென்று, தன் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் போல சுரேனின் இதயம் படபடத்தது!

முதன் முறையாகத் தன்னுள் நிகழ்கின்ற இந்த மாற்றங்கள் அவனைப் பாதித்தாலும், அவள் தன்னைக் கடைசியாக உதறித் தள்ளி விட்டுச் சென்ற நிலை மட்டும், மறவாமல் கண் முன் தெரிந்தது.

**ப**ழைய நினைவில், உடனே சுரேனின் முகம் கோபத்தில் கருங்கி, உடலில் இறுகியது.

திடீரென்று விளைந்த அவனுடைய முக மாற்றத்தைக் கண்ட மித்ரா, ஒரு கணம் துடித்துப் போனாள்.

அதுவரை மௌனமாக நின்று, விழிகளால் அவளை உரசியவன், விருட்டென்று திரும்பி உள்ளே சென்றுவிட்டான்.

வாசலில் பெண்கள் நிறையப் பேர் ஆரத்தி சுற்றி, மணமகளை உள்ளே அழைத்துச் சென்றனர்.

சுரேனைக் காணாமல், மனம் கலங்கி விழிகள் சிவந்து தேடினாள் அவள்.

துர்கா மேடையில் ஏறி அமர்ந்ததும், நலங்கு வைக்கும்போது, துணையாய், தோழிப் பெண்ணாக மித்ரா அவள் அருகில் நின்றபோதுதான், அவள் சுரேனை மீண்டும் பார்த்தாள்.

அவன் முன் வரிசையில் அமர்ந்து, யாரோ ஒரு பெரிய மனிதரிடம் சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்தான்.

மேடையின் பக்கம், அவன் பார்வை திரும்பவே இல்லை. மனம் உறைந்து கண்கள் கலங்கி, நீர் கோர்த்து நின்றது மித்ராவுக்கு.

மாப்பிள்ளை விவேக்கையும் மேடையில் ஏற்றி, துர்காவின் அருகில் அமர்த்தி, நலங்கு வைத்தார்கள்.

இருவரும் காதலர்கள் என்பதால், கொஞ்சலும், சீண்டலும், கேலியுமாகப் பொழுது இனிதாகக் கழிந்தது.

ஆனால் மனதளவில் களைத்துப் போயிருந்த மித்ராவுக்குத் தான், எதிலுமே கவனம் முழுதாகப் பதியவில்லை.

தன் மனதில் காதலெனும் கவிதை செய்து, பார்வை எனும் உளியால் கனவுச் சிலைகளை வார்த்தவன் கம்பீரமாய் தன் எதிரே அமர்ந்து இருந்தும், தன்னை ஒரு பார்வையால் கூடத் தீண்டாமலிருந்தது, மித்ராவைப் பெரிதும் பரிதவிக்கச் செய்வதாய்!

மேடையில் இருவருக்கும் நலங்கு வைத்து முடித்ததும், நிச்சயதார்த்தம் நடந்தது.

அண்ணன் என்ற முறையில், சுரேந்திரன் மேடைக்கு வந்தபோது, அவனுடைய ஒவ்வொரு அசைவுகளையும் தன் மனம் எனும் கருவியால் படமெடுத்துக் கொண்டே இருந்தாள் மித்ரா.

அவள் அருகிலேயே அவன் இருந்தாலும், அவள் இருந்த பக்கம் அவன் விழிகள் திரும்பவே இல்லை.

விவேக்கிடமும் துர்காவிடமும் குனிந்து மெல்லிய குரலில் கேலி செய்து விட்டு, அவன் நிமிர்ந்தபோது, பார்வை ஒரு நொடி அவள் மீது படிந்தாலும் அறிமுகமில்லாதவனின் பார்வையைப் போல் உடனே விலகியது.

என்ன செய்தால் தன் மனத் தவிப்பு சரியாகும் என்று யோசித்தபோது மித்ராவுக்கு உடனே சுரேனைத் தனியாகச் சந்திக்க வேண்டும் என்று தோன்றியது.

நிச்சயதார்த்தம் எப்போது முடியும் என்று காத்திருந்த மித்ரா, துர்காவிடம் வேகமாக வந்தாள்.

''துர்கா! நான் சுரேனோட உடனே பேசியாகணும். அதற்கு ஏற்பாடு பண்ணு துர்கா... ப்ளீஸ்! அவர் என்னைப் புரிஞ்சிக்காம விலகி விலகிப் போறாரு... இந்த நிமிஷமே செத்துடலாமான்னு இருக்கு.'' கலங்கிய கண்களுடன் கெஞ்சினாள் மித்ரா.

துர்கா வேண்டுமென்றே, ''யார்...? சுரேனா... அது யார்? எனக்குத் தெரியாதே? அது சரி... நான் என்ன தரகரா - 'மேட்ச் மேக்கிங்' எல்லாம் பண்றதுக்கு? எனக்கு அதெல்லாம் தெரியாதும்மா.'' வேணும்னா நீயே போய் பேசிக்கோ!'' என்றாள் கிண்டலாக.

மித்ராவின் விழிகளில் சாரலாய நீர்த்துளிகள் வழியத் தொடங்கியதும், அவளுக்குத் தாங்க முடியவில்லை.

''சரி! சரி! சும்மா ஜோக்கடிச்சேன் மித்ரா! ஒரு நிமிஷம் இரு'' என்றவள், அபிராமி அம்மாவை அழைத்து வரச் சொல்லி திலகாவை அனுப்பிவிட்டு, மித்ராவிடம் திரும்பினாள்.

''மண்டபத்து மேலே ஒரு ரூஃப் கார்டன் இருக்கு. நீ அங்க போய் வெயிட் பண்ணு. நான் அண்ணனை அனுப்பச் சொல்றேன்'' என்றாள்.

அபிராமி அம்மா அறைக்குள் வந்ததுமே, மெதுவாக வெளியே சென்ற மித்ரா, மனதில் மிகுந்த எதிர்பார்ப்புடனும், ஒருவித நிராசையுடனும் மெல்ல மாடியேறினாள்.

மித்ராவைக் காணாமல் தேடிய விழிகள் தவிக்க, ஒருவித அலைப்புறுதலுடன் அமர்ந்திருந்த சுரேன், அப்போதுதான் அவள் தனியே மாடிக்குச் செல்வதை வியப்புடன் கூர்ந்து கவனித்தான்.

அவன் கண்கள் அவளையே கூர்மையாக அளவெடுத்தன.

## 15

அந்த நேரம், அபிராமி அம்மா சுரேனுக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தார்.

''சுரேன்! என்ன பாக்குறே! உனக்காகத் தான் மித்ரா மாடிக்குப் போறா. உன்னோட... தனியா ஏதோ பேசணுமாம். துர்காதான், அவளை அங்கே போய் இருக்கச் சொன்னா'' என்றபோது அவன் முகத்தில் வந்த கோபம், மகிழ்ச்சி இரண்டும் கலந்த தீவிரத்தைக் கண்டு, புன்னகை வந்தது அபிராமி அம்மாவுக்கு!

பிறகு, அவர் எல்லா விஷயங்களையும் சுரேனிடம் விளக்கிக் கூறும்போது, அவன் முகம் பல 'பா'வங்களை வெளிப்படுத்தியது.

தன்னை உயிரினும் மேலாக அவள் விரும்புகிறாள் என்று தெரிந்தவுடன், மனதில் அதுவரை கனமாக அழுத்திக் கொண்டிருந்த ஏதோ ஒன்று அவசரமாக விடைபெற்றுச் சென்றது!

உடனே வேகமாக மாடிக்குச் சென்றான் சுரேன்.

தனியே மாடிக்குச் சென்று காத்திருந்த மித்ராவுக்கு, ஒரு கணம், ஒரு யுகமாகியது.

இரவு நேரக் காற்று குளிரை சுமந்து வீசிக் கொண்டிருந்தது.

நிலவு பனியில் நனைந்து, குளிருக்கு இதமாய் மேகத்துக்குள் மறைந்து கொண்டது.

பூங்காற்றும், உறங்காமல் சாமரமாய் வீசிக் கொண்டிருக்க, இதயம்

பலவீனமாய்த் துடித்தது மித்ராவுக்கு!

காதல் பரீட்சை எழுதி முடித்துவிட்டு, முடிவுக்குக் காத்திருக்கும் மாணவியைப் போல், மித்ரா தவிப்புடன் காத்திருந்தாள்.

காத்திருப்பதன் சுகமே, காதலில் தனிதான் என்றாலும் இன்று சுரேனுக்காகக் காத்து இருப்பது தவிப்பாக இருந்தது மித்ராவுக்கு! காதல் அகதியாய்க் காத்திருந்தாள் அவள்!

அவளை வெகு நேரம் காக்க வைக்காமல் அவனுடைய அழுத்தமான காலடி ஓசை திடீரெனக் கேட்டது.

அந்தப் பாதச் சுவடுகளின் ஒலி, ஏனோ அவள் இயத்தில் எதிரொலித்து அவளுக்குள் மெல்லிய அதிர்வுகளை ஏற்படுத்த, நிமிர்ந்து பார்த்தாள் மித்ரா!

சுரேன், தன் இயல்பான கம்பீர நடையுடனும், அழுத்தமான காலடிகளுடனும், வேகமாக அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

அவளுடைய விழிகள், ஆனந்தத்தில் கலங்கியதால், அவன் உருவம் நீரில் தெரிந்த நிழல் போல், வரி வடிவமாய்க் கலங்கித் தெரிந்தது.

கண்களை இறுக மூடித் திறந்த மித்ரா, வெகு அருகில் சுரேன், கூர்மையாக இடுங்கிய கண்களுடனும், ஊடுருவும் பார்வையுடனும் நிற்பதைக் கண்டாள், அவனைத் தீண்டிய குளிர்ந்த காற்று, தன்னையும் தீண்டிச் செல்ல மேனி சிலிர்த்துத் தவயிருந்தாள்.

மனம் படபடத்ததில், அவளுக்கு வார்த்தைகள் சுலபத்தில் வெளி வரவில்லை.

கண்களின் அலைப்புறுதல் குறைந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், அவனை நோக்கி, ''ஸாரி!'' என்றாள் உணர்ச்சிகள் நிறைந்த குரலில் கிசுகிசுப்பாக.

சுரேனிடம் எந்த அசைவுமில்லை. பார்வை மட்டும், அவளிடமே விலகாமல் பதிந்திருந்தது.

மித்ரா மெதுவாக நிமிர்ந்தாள்.

''எனக்கு எப்படிச் சொல்றதுன்னே தெரியலேங்க... அம்மா உங்களுக்கு எல்லாமே சொல்லி இருப்பாங்க. எதையுமே சரியாப் புரிஞ்சிக்காம மடத்தனமா இருந்துட்டேன்... ப்ச் என்னை மன்னிச்சி.. ஏத்துப்பீங்களா?'' ஒரு ஏக்கத்தோடு அவள் கேட்டபோதும், அவன் கண்களில் சிறிதும் கருணையில்லை.

கையைக் கட்டிக்கொண்டு, பேசாமல் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் சுரேன்.

மனதில் இருந்த வருத்தம், வேதனை, குற்ற உணர்ச்சி முழுவதும் கண்களில் எதிரொலிக்க, கலங்கிய கண்களுடன் நின்ற மித்ரா, ''சுரேன்...! ப்ளீஸ்... என்னைப் புரிஞ்சிக்க மாட்டீங்களா? நீங்க இல்லாம என்னால... முடியலை சுரேன்! நான் உங்களை என் உயிருக்கும் மேலா நேசிக்கிறேன்'' என்றபோது கண்கள் வைரமாய் மின்ன, சுரேனின் விழிகளில் முதன் முதலாய் மனம் நிறைந்த புன்னகை! அவளுடைய வார்த்தைத் தென்றல், சாமரமாய் அவன் மனதில் வீசியது.

மெதுவாக ''ஆனா, உனக்கு ஒரு தண்டனை இருக்கே! என்னைப் பத்தி தப்பா



நினைச்சதுக்கு... காக்க வைச்சதுக்கு... எல்லாத்துக்குமா சேர்த்து...'' என்றான் குறும்பாக.

என்ன என்பதுபோல் பதறிப்போய் பார்த்தவளிடம், ''அது ஆயுள் தண்டனை கூட இல்லை! அதை விடப் பெரிசு! நான் உயிரோடு இருக்கிற வரைக்கும் பிரியாம என் கூடவே காதல் அகதியா இருக்கணும்! சரியா...?'' என்று கேட்டான் சுரேன் உல்லாசமாக, உயர்த்திய புருவங்களுடன்!

உடனே, ''உம்!'' என்று, அவள் வெட்கத்துடன், மின்னும் விழிகளோடு தலையசைத்தாள்.

தன் கண்களில் கரை காணாத காதலுடன், தன் இரு கைகளையும் பறவையின் சிறகாய், இதமாய் விரித்த சுரேன், பூங்காற்றாய் வந்தவளை, வண்ணக் கனவுகளுடன் வசப்படுத்திக் கொண்டான்.

இனி அவனில்லாமல் தான் இல்லை என்பதையும், தன்னுடைய இடம் எது என்பதையும் முழுக்க உணர்ந்திருந்த சங்கமித்ராவும், மகிழ்ச்சியுடன் அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள்.

அந்த நிமிடம், அவளைப் பற்றி எண்ணும் போது, வரம் தருகின்ற ஒரு வசந்தமாய்... தன் வாழ்க்கைக்கே ஒளி தந்த ஒரு வெளிச்ச விடியலாய் எண்ணத் தோன்றியது.

அப்போது, காற்றில் கலந்து வந்த இனிய நாதஸ்வர ஒலி, அவர்களுடைய செவிகளில் இனிதாய் விழுந்தது.

வேகமாக வீசிய தென்றல், இருவருக்குமிடையே நுழைய முயன்று தோற்றுப் போய், வேறு புதுப் பாதை வகுத்தது.

காதலாய் அன்று சுரேனின் இதயத்தில் சங்கமித்த மித்ரா, இன்று கவிச்சந்தமாய் அவன் வாழ்க்கையிலும் சங்கமித்தாள்.

இரவு, மென்பனி தூவி அவர்களை ஆசீர்வாதம் செய்ய, நிலவு புன்னகையுடன் அதை வழிமொழிந்தது.

★ ★ ★